Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-16

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-21 | 06-11-2004 | சனிக்கிழமை | ஓசை -262




# அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

# அடுத்த வாரத்தில் வன்னி வருகிறார்!

## நோர்வே வெளிவிவகார அமைச்சருடனான தேசியத்தலைவரின் சந்திப்பில் பங்கேற்பார்

(கிளிநொச்சி)

**விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அடுத்த வாரத்தின் முதல் நாட்களில் வன்னி வரவுள்ளதாக ஊர்ஜிதமான தகவல்கள் தெரிவிக்கின்றன. வன்னி வரும் அவருடன் பாரியார் அடேல் பாலசிங்கம் அவர்களும் வரவுள்ளதாக அறியவருகிறது. வன்னிவரும் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சென் அவர்களுக்கும் இடையில் எதிர்வரும் 11ஆம்திகதி இடம்பெறவுள்ள சந்திப்பின் போது கலந்துகொள்ளவுள்ளார் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.**

மேலும் வன்னியில் தங்கியிருக்கும் வேளையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்துத் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் குறித்தும். விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்தும் விளக்குவார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும், வன்னிவரும் அரசி



யல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எத்தனை நாட்கள் தங்கியிருப்பார் எனத் தெரிய வரவில்லை.

## காணாமற் போனோர் குறித்தமனு விசாரணைகள் மீண்டும் ஒத்திவைப்பு

யாழ்.குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போனோர் குறித்த ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளில் பிரதான எதிரியாகவுள்ள முன்னாள் சிறிலங்காப் படையதிகாரி லான்ஸ் கோப்றல் சோமரத்தின ராஜபக்ஷ தரப்பில் வாதிடுவதற்கு சட்டத்தரணிகள் நியமிக்கப்படுவதில் இழுபறிநிலை தொடர்ந்தும் நிலவுவதால் மனுக்கள் மீதான விசாரணைகளை முன்னெடுப்பதில் தாமதங்கள் ஏற்பட்டிருப்பதாக மனுதாரர் தரப்பில் இருந்து கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்.இல். படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போனோரின் உறவினர்களால் யாழ். மேல் நீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனுக்களின் பிரதான எதிரியும் பாடசாலை மாணவி குமாரசாமி கிருஷாந்தியை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திக்கொன்றமை தொடர்பான குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டவருமான கோப்ரல் ராஜபக்ஷ நேற்று இவ்ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளுக்கான யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதிபதி வரதராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டார்.

இவர் இம்மனுக்கள் தொடர்பான விசாரணைக்கு நேற்றுடன் 8 ஆவது தடவையாக ஆஜர் செய்யப்பட்ட போதும் ராஜபக்ஷ தன்தரப்பில் வாதிட எந்த ஒரு சட்டத்தரணியும் (16ஆம் பக்கம் பார்க்க)




### - கிளி. பண்பாட்டு மண்டபத்தில் -

## பெண்கள் மீதான வன்முறையை முடிவிற்கு கொண்டுவரும் பிரசாரத்திட்டம்

(அலுவலக செய்தியாளர்)

பெண்களுக்கெதிரான வன்முறையை முடிவிற்குக் கொண்டு வருவதற்கான இலங்கைப் பிரச்சாரத்திட்டம் கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்டு அதன் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று நேற்றுக் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

மேற்படி நிகழ்ச்சியானது நேற்றுக் காலை 10.00 மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்தது. இந் நிகழ்ச்சியானது கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான ஆரம்ப பிரச்சார நிகழ்ச்சியாகவே அமைந்தது.

இந் நிகழ்வில் வரவேற்புரையினை ஒக்ஸ்பாம் நிகழ்வு இணைப்பாளர் மாட்டீன் லின்டர்ஸ் நிகழ்த்தினர். தொடர்ந்து ஒக்ஸ்பாம் நிகழ்வுப் பில்எஸ் மண்ட் இத் திட்டம் பற்றிய தொகுப்பினை வழங்கினார்.

தொடர்ந்து அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி, பாராளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், யாழ்ப்பாண பெண்கள் அபிவிருத்திக்கான நிலையத்தைச் சேர்ந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## தெகிவளையில் கொல்லப்பட்டவர் புளொட் மோகனின் நெருங்கிய சகா

### - ஆங்கில நாளேடு தகவல்

தெஹிவளையில் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட் தயாளகுமார் என்பவர் புளொட் மோகனின் நெருங்கிய சகா எனத் தெரியவந்துள்ளது.

கிழக்கில் புளொட் மோகன் தலைமையில் ஆளஊடுருவித் தாக்கும் படையணியினரின் செயற்பாடுகளில் இவருடைய ஒத்துழைப்பை கணிசமாகப் பெற்றுவந்ததாக ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

### – உயிலங்குளம் இராணுவ முகாம் பகுதியில் –

## சந்தேகத்திற்குரிய இடங்களை தோண்டிப் பார்க்க அனுமதி

மன்னார் உயிலங்குளம் இராணுவ முகாம் பிரதேசத்தில் சந்தேகத்திற்குரிய இடங்களில் தோண்டுவதற்கு மன்னார் மாவட்ட நீதிமன்றம் நேற்று விசேட குற்றப் புலனாய்வுத் துறையினருக்கு அனுமதியளித்துள்ளது.

வாகன கடத்தல்கள் மற்றும் கொலைகளுடன் தொடர்புடைய இராணுவ மேஜர் அனுரத்த சம்பிக்க என்பவர் கைதாகி மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது வெளியான தகவல்களையடுத்தே (16ஆம் பக்கம் பார்க்க)

### –சனாதிபதி பதவிக் காலம் குறித்த சர்ச்சைக்கு–

## சட்ட ஆலோசனை பெற தேர்தல் ஆணையாளர் முடிவு

(கொழும்பு)

சனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து, தேர்தல் ஆணையாளர் நீதிபதியின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. 2006ஆம் ஆண்டு அடுத்த சனாதிபதி தேர்தல் இடம் பெறுமென ஆளும்கட்சியும், சனாதிபதி தேர்தல் அடுத்த வருடம் நடாத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சியும் தெரிவித்து வருகின்றன. (16ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான் குடி வன்முறைகளுக்கு வெளிநாடொன்றின் ஒத்துழைப்பு

### - ரவுப் மொலிப் பிரமுகர் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் சுபி முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் 'மஜ்லிஷுஸ் ஷுறா' என்ற அமைப்பினால் பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. தமது ஊரில் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் ஈமானுக்கு எதிரான போராட்டம் தொடரும் என்றும் அந்த பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈமானுக்கு எதிரான சக்திகள் தமது 'அத்வைத' கொள்கையை கைவிட்டு முழுமையாக இஸ்லாத்தில் இணைய வேண்டும். 'அத்வைத' சக்திகள் தொடர்ந்தும் தமது கொள்கையிலிருந்து தூய இஸ்லாத்தில் இணைந்து கொள்ளத் தவறும் பட்சத்தில் பல்வேறு நெருக்கடிகளையும் இழப்பு (16ஆம் பக்கம் பார்க்க)

## பாரவூர்தி தடம்புரண்டது

(முறிகண்டி)

கொழும்பிலிருந்து யாழ் நோக்கிச் சென்று கொண்டிருந்த பார ஊர்தியொன்று கிளிநொச்சியில் தடம் புரண்டது. நேற்று முன்தினமிரவு ஏ-9வீதி 152ஆம் கட்டைப்பகுதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

கட்டாக்காலிமாடுகளுக்கு விலகிச் செல்ல முற்பட்டபோதே பொருட்களுடன் வந்த இப் பார ஊர்தி தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியதாகத் தெரியவருகின்றது.(09)



உமையாள்புரம் பகுதி ஏ-9 வீதியில் பாலம் திருத்துவதற்காக தற்காலிகமாக இடப்பட்ட பாதையை மேவி வெள்ளம் பாய்ந்ததால் வீதிப்போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டது. இதனையடுத்துப் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்தின் மூலம் பிரயாணம் மேற்கொள்ளத்தக்க வகையில் அவசர அவசரமாக வீதி செப்பனிடப்பட்டது.

(படம் செல்வா)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

02.11.2004 அன்று கைவேலிக்கும் புதுக்குடியிருப்புச் சந்திக்குமிடையில் எனது மூக்குக்கண்ணாடி தவறவிடப்பட்டுள்ளது. எனவே கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புதுக்குடியிருப்பு காவல்துறை தடைமுகாமில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். செ.பரஞ்சோதி, புதுக்குடியிருப்பு. (5058)


## கலந்துரையாடல்

கிளிநொச்சி மாவட்ட பல்கலைக் கழக புகுமுக மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கிளி/பல் கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தில் நடைபெற இருப்பதினால் அனைத்து கிளி/பல்கலைககழக புகுமுக மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி/பல்கலைக்கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தலைவர் கேட்டுக்கொள்கிறார்.

### - வன்னியில் தொடர் மழையால் -

# பாதைகளை ஊடறுத்துப் பாயும் வெள்ளத்தினால் போக்குவரத்துத் தடை

(அலுவலக செய்தியாளர்)

தற்போது பெய்துவரும் பெருமழை காரணமாக மழை வெள்ளம் வீதிகளை ஊடறுத்துப் பாய்வதன் விளைவாகப் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

முல்லைத்தீவு பிரதான வீதியின் வெலிக்கண்டல் தற்காலிக பாலம் உடைப்பெடுத்ததன் காரணமாக அவ்வீதியூடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளதுடன், கிளிநொச்சி வட்டக்கச்சியூடாகவே பலத்த பிரயத்தனங்களுக்கு மத்தியில் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு மக்கள் பயணம் மேற்கொண்டதனைக் காணக்கூடியதாகவிருந்தது.



கிளிநொச்சி கனகாம்பிகைக்குளம் வான் பாய்வதன் காரணமாக இரத்தினபுரம், ஐந்தடிவான் பகுதி வெள்ளம் பாய்வதனால் இரத்தினபுரம் வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டதுடன், ஐந்தடிவான் பகுதியூடாக உந்துருளிகள், பயணிகள் உழவு இயந்திரங்களின் மூலம் ஒரு புறத்திலிருந்து மறுகரைக்கு ஏற்றி இறக்கப்பட்டு பயணங்களை மேற்கொண்டதனை அவதானிக்கக்கூடியதாகவிருந்தது. மற்றும் கோணாவில் அக்கராயன் பகுதிகளிலும் வீதிகளைக் குறுக்கறுத்து வெள்ளம் பாய்வதன் காரணமாக போக்குவரத்துக்கள் பலமணி நேரம் தடைப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

அண்மையில் பெய்துவரும் தொடர் மழையினால் துணுக்காய்ப் பிரதேச தேறாங்கண்டல் மருதங்குளம் பகுதியில் உள்ள கலிங்குகளினால் நீர் மேவிப் பாய்வதால் மக்கள் பயணங்களை மேற்கொள்ள முடியாமல் அவதிப்படுகின்றனர். இதன்போது பாதைகளும் துண்டிக்கப்பட்டதால் வாகனப்போக்குவரத்தும் இல்லாத நிலையில் மக்கள் அவதிப்படுகின்றனர். அவர்களின் அன்றாட இயல்பு வாழ்வுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (சோ,24)


## அறிவித்தல்

பகல் 1.30 இற்கு முல்லைத்தீவில் இருந்து முகமாலைக்குப் புறப்படும் விரைவுப் பேருந்து மழை காரணமாக இன்று சனி தொடக்கம் பகல் 12.30 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து புறப்படும் என்பதனை அரச, அரசசார்பற்ற ஊழியர்களுக்கும் ஏனைய பயணிகளுக்கும் அறியத்தருகிறோம்.

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
முல்லைத்தீவு,
தமிழீழ போக்குவரவுக்கழகம்

(சி.10605)



## சாவு அறிவித்தல்

### அமரர் சு.பொன்னம்பலம்

(இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி கிளை நடமாடும் மருத்துவ சேவை மருத்துவர்)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், தையிட்டி காங்கேசன் துறையை வசிப்பிடமாகவும், தற்போது உரும்பிராயில் வசித்து வந்தவரும், இலங்கை செஞ்சிலு வைச் சங்க கிளிநொச்சி கிளையின் நடமாடும் மருத்துவ சேவை மருத்துவ நமான சுப்பிரமணியம் பொன்னம்பலம் அவர்கள் 03-11-2004 அன்று காலமானார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கு.சிவகுணபாலன்
(மருமகன்)

(சி10600)



## கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை முல்லைத்தீவு

# கேள்வி அறிவித்தல் - 2005

கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குத்தகைகளுக்கு அரக்கு முத்திரை இடப்பட்ட கேள்விகள் என்னால் 19.11.2004ஆம் திகதி முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஆகக்கூடிய கேள்வித்தொகையின் பிரகாரம் குத்தகைக்கானவர்கள் தெரிவுசெய்யப்படும்.

கேள்விப் படிவக் கட்டணம் ரூபா.500 உம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1000 உம் செலுத்தி 18.11.2004ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கேள்விப் படிவங்கள் பெற்றுக்கொள்ளலாம்

கேள்விகள் 19.11.2004ஆம் திகதி முற்பகல் 11.30 மணிக்குத் திறக்கப்படும். சித்தியடையும் கேள்விக்காரர் உடனடியாக கேள்வியில் 1/3 பங்கை பாதுகாப்புவைப்பு பணமாகச் செலுத்திச் சபையின் நிபந்தனைக்கேற்ப ஒப்பந்தம் செய்து கொள்ளப்படல் வேண்டும். கேள்வித் தொகையின் மீதிப்பணத்தை எட்டு (8) சம பங்குகளாகப் பிரித்து சனவரி முதல் ஆகஸ்ட் வரை மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும்.

கடந்த காலக் கேள்விகள் மூலம் சபைக்கு வருமதியான நிலுவைகளைச் செலுத்தத் தவறியவர்கள் குத்தகைக் கேள்விக்குப் பங்குபற்ற அருகதையற்றவராவர்.

கேள்வியை முழுமையாகவோ, பகுதியாகவோ, ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ விசேட ஆணையாளருக்கு/செயலாளருக்கு அதிகாரமுண்டு. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்படிவங்களை இந்த அலுவலகத்திற்கு நேரிலோ அன்றேல் பதிவுத் தபாலிலோ சேர்ப்பித்தல் வேண்டும். அதன் ஒரு பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரங்கள் | மாத வாடகை | காலப்பகுதி | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| | முல்லைத்தீவு உப அலுவலகம் | | | |
| 01. | முல்லைத்தீவு சந்தை | | 01.01.2005முதல் 31.12.2005 வரை | ரூபா.24500.00 |
| | | | | ரூபா.19200.00 |
| 02. | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா. 6500.00 |
| 03. | முல்லைத்தீவு ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | |
| | முள்ளியவளை உப அலுவலகம் | | | |
| 01. | தண்ணீரூற்று சந்தை | | ” | ரூபா.64700.00 |
| 02. | முள்ளியவளை சந்தை | | ” | ரூபா.28125.00 |
| 03. | வற்றாப்பளை சந்தை | | ” | ரூபா.15000.00 |
| 04. | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.59350.00 |
| 05. | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.24050.00 |
| 06. | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா. 6725.00 |
| 07. | சிலாவத்தை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா. 7225.00 |
| 08. | தண்ணீரூற்று ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.43850.00 |
| 09. | முள்ளியவளை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.13875.00 |
| 10. | முள்ளியவளை சந்தைக்கடை இல.1 | 250.00 | ” | ரூபா. 7050.00 |
| 11. | முள்ளியவளை சந்தைக்கடைஇல.2 | 250.00 | ” | ரூபா. 8800.00 |
| 12. | முள்ளியவளை சந்தைக்கடை இல.3 | 250.00 | ” | ரூபா. 8800.00 |
| 13. | தண்ணீரூற்று சந்தைக்கடை இல.1 | 250.00 | ” | ரூபா.14525.00 |
| 14. | தண்ணீரூற்று சந்தைக்கடை இல்.2 | 250.00 | ” | ரூபா.14525.00 |
| 15. | தண்ணீரூற்று சந்தைக்கடை இல.3 | 250.00 | ” | ரூபா.14525.00 |
| 16. | தண்ணீரூற்று சந்தைக்கடை இல.4 | 250.00 | ” | ரூபா.14525.00 |
| | செம்மலை உப அலுவலகம். | | | |
| 01. | செம்மலை சந்தை | | ” | ரூபா.4400.00 |
| 02. | குமுழமுனை சந்தை | | ” | ரூபா.14800.00 |
| 03. | அளம்பில் சந்தை | | ” | ரூபா.11550.00 |
| 04. | குமுழமுனை மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.12550.00 |
| 05. | உடுப்புக்குளம்அ மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.13600.00 |
| 06. | அளம்பில் மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.22625.00 |
| | முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | |
| 01. | முள்ளிவாய்க்கால் சந்தை | | ” | ரூபா.11880.00 |
| 02. | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.28050.00 |
| 03. | மாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா.15575.00 |
| 04. | மாத்தளன் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | ” | ரூபா. 7275.00 |

01. தங்களால் கோரப்படும் கேள்வித் தொகைகள் கேள்விப்பத்திரப் பணங்கள் மற்றும் கடை வாடகை, மாதவாடகை ஆகியவற்றிற்கு வற்வரி 15% புறம்பாகச் செலுத்தப்படல் வேண்டும்.

02. சந்தைகளை குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் 3%இற்கு மேல் சநதை வரி அறவிடக்கூடாது என்பதையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

இ.கிருஸ்ணபிள்ளை
விசேட ஆணையாளர்/செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேசசபை,
முல்லைத்தீவு.

(சி-10512)

# பலூஜா நகர்மீது பாரிய தாக்குதலுக்கு அமெரிக்க படையினர் முஸ்தீபு


## –உயர் இராணுவ அதிகாரி அறிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகர் மீது பாரிய தாக்குதலொன்றை மேற்கொள்ள அமெரிக்கக் கடற்படை இறுதித் தயார்படுத்தல்களில் ஈடுபட்டிருப்பதாக சிரேஸ்ட அமெரிக்கத் தளபதி ஒருவர் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இவர் ராய்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு தெரிவித்த தகவலில் ஈராக்கின் இடைக்கால நிர்வாகத் தலைவர் அலாவி ஐரோப்பிய யூனியன் தலைவர்களைச் சநதிக்க இருப்பதாகவும் அதனையடுத்து அவர் ஈராக் திரும்புவாரென்றும் தெரிவித்துள்ளார். அல்-ஹைறாவின் சகபாடியாக விளங்கும் அபுமுஸாப்-அல் சர்காவியையும் மற்றும் சதாம் ஹுசைனின் சகாக்களையும் அடக்கி ஒடுக்கும் நோக்கத்துடன் அமெரிக்க தலைமையிலான பாரிய தாக்குதல் ஏற்பாடாகியுள்ளது.

பாக்தாத்திற்கு மேற்கே 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பலூஜாவில் முஸ்லிம் தீவிரவாதிகள் கூடுதலாக உள்ளனர் எனவும், பலூஜாவைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தால் ஈராக்கின் ஏனைய பகுதிகளிலுள்ள கிளர்ச்சி வாதிகளின் கேந்திர நிலைகளையும் சுமூகமாக்கி திட்டமிட்டபடி சனவரி மாதத்தில் தேர்தலை நடத்த முடியும் என அலாவி எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



பலஸ்தீனத்தின் மேற்குக் கரைப் பகுதியிலுள்ள ரமல்ளாவில் பலஸ்தீன தலைவர் யசீர் அரபாத்தின் அலுவலகம் ஆரவாரமற்று அமைதியுடன் காணப்படுகின்றது. பிரான்சில் சிகிச்சை பெற்று வரும் அரபாத்தின் உடல் நிலையில் நேற்றும் முன்னேற்றம் காணப்படவில்லை.

# ஆயுதக் களஞ்சியம் சூறை; தடுக்க முயற்சி எடுக்கவில்லை

## -நியுஸ்வீக் பத்திரிகை தகவல்

(நியூயோர்க்)

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி வீழ்ச்சி அடைந்தவுடன் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஆயுதங்களும், வெடிமருந்துகளும் சூறையாடப்பட்டன. இது பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டும் அமெரிக்க இராணுவ வீரர்கள் அதைப்பெரிதாகக் கண்டுகொள்ளவில்லை. இதற்கான ஆதாரம் இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தற்போது தெரிவித்துள்ளனர்.

ஆயுதக்கிடங்கிலிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகளை, பொது மக்கள் சூறையாடுவதை நேரில் கண்டதாக அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ வுக்கு ஈராக் உளவாளி ஒருவர் தெரிவித்தார். இந்தக் கிடங்கில் நூற்றுக்கணக்கான தொன் வெடிமருந்துகள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தன என்று அதிகாரிகளை மேற்கோள் காட்டி நியூஸ்வீக் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இவை சூறையாடப்படுவது பற்றிய தகவல் குறித்து தமது அமைப்புகளையும், ஈராக்கில் உள்ள அமெரிக்க இராணுவ முகாம்களையும் சி.ஐ.ஏ உஷார்ப்படுத்தியது. ஆனால் ஆயுதங்கள், வெடிமருந்துகளை சூறையாடியவர்களை விரட்டவோ அல்லது அந்தக் கிடங்கை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரவோ தமது படைகளை அமெரிக்க இராணுவம் அனுப்பவில்லை என்று அதிகாரி ஒருவர் தெரிவித்ததாக அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. இந்தக் கிடங்கில் இருந்து 320 தொன் வெடிபொருள் சூறையாடப்பட்டதாக ஈராக் அரசும், ஐ.நா அமைப்பும் தெரிவித்துள்ளன.

தமது எச்சரிக்கையை அமெரிக்க இராணுவம் அலட்சியம் செய்ததாக சி.ஐ.ஏ புகார் கூறுவதை ஏற்கமுடியாது என்று அமெரிக்க இராணுவத் தலைமையக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக்கில் போர் தொடங்கும் முன் சதாமின் ஆதரவாளர்கள் அந்தக் கிடங்கில் இருந்து ஆயுதங்களை இரகசியமாகக் கடத்திச் சென்றிருப்பார்கள். அல்லது போர் முடிந்தபிறகு அந்தக் கிடங்கை இராணுவம் அழித்திருக்கும் என்று பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவிப்பதாகவும் நியூஸ் வீக் பத்திரிகை தெரிவிக்கிறது.

# அமெரிக்க சனாதிபதி புஷ்சின் இரண்டாவது பதவிக்கால அமைச்சரவையில் மாற்றம்!

## –முக்கிய அமைச்சர்கள் விலக்கப்படலாம்

( வோஷிங்டன்)

**தமது 2 ஆவது பதவிக்கால அமைச்சரவையில் மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.**

சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் புஷ் உரை நிகழ்த்துகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் தொலைக்காட்சியில் அமைச்சரவையை புனரமைப்பது சம்பந்தமாக வெள்ளை மாளிகை சிரேஷ்ட அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்படுமென்று கூறினார்.



சனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் அவரது பாரியார் லாரா புஷ்சுடன் மகிழ்சியுடன் காணப்படுகிறார். அருகில் துணை சனாதிபதி டிக்செனியும் அவரது பாரியார் லினிசெனியும் காணப்படுகின்றனர்.

பாதுகாப்பமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட்டும் வெளிவிவகார அமைச்சர் கொலின்பவலும் புதிய அமைச்சரவையில் இடம் பெறமாட்டார்களென்றும் குடியரசுக் கட்சியின் சிரேஷ்ட அங்கத்தவர்கள் தெரிவித்துள்ளனர். பாதுகாப்பமைச்சர் ரம்ஸ்பீலட்டிற்கு பதிலாக பிரதி பாதுகாப்பமைச்சர் கோல்ப் வல்புவிற் நியமிக்கப்படலாமென்று ஊடகங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. ஆனால அமெரிக்க செனட்சபை அவரது நியமனத்தை ஏற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகத்திற்கு இடமான விடயமென்றும் அறிவிக்கப்படுகின்றது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் பதவி விலகப்படுவார் என்பது நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட விடயமெனவும் எனினும் இரு மாதங்களுக்கு தொடர்ந்து பதவி வகிப்பார் எனவும் அவதானிகள் தெரிவித்துள்ளனா.

# சட்டத்திற்குப் புறம்பாக தங்கியுள்ளோரை வெளியேற்ற மலேசியா காலக்கெடு

(கோலாலம்பூர்)


மலேசியாவில் சட்டத்திற்குப் புறம்பாக தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ள காலத்திற்குள் அவர்களாகவே வெளியேற அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. அப்படி வெளியேறுவோர் கைது நடவடிக்கைக்கோ அல்லது தண்டனைக்கோ ஆளாகமாட்டார்கள் என மலேசியப் பிரதமர் வாக்குறுதி அளித்துள்ளார். புனித ரம்ழான் மாதத்தையொட்டி சட்டத்திற்குப் புறம்பாக தங்கி யுள்ளவர்களுக்கு பொது மன்னிப்பு அவகாசம் தரப்பட்டுள்ளது. கடந்த 10ஆம் திகதியில் இருந்து 17நாட்களுக்குள் வெளியேற அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி அவர்கள் வெளியேற வேண்டுமென்று பிரதமர் அப்துல்லா அகமது படாவி கேட்டுக் கொண்டுள்ளாா.

மலேசியாவில் 12இலட்சம் வெளிநாட்டவர் சட்டத்திற்குப் புறம்பாக தங்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது. தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பொது மன்னிப்புக் காலத்தில் 4இலட்சம் பேர் வெளியேறுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது. சட்டத்திற்குப் புறம்பாகத் தங்கியுள்ளவர்களில் அநேகம் பேர் இந்தோனேசியா நாட்டைச் சேர்ந்தவர்கள். அறிவிப்பு வெளியான நாளில் மட்டும் 2217 இந்தோனேசியர்கள் மலேசியாவை விட்டு வெளியேறியுள்ளனர்.

# தற்கொலைத் தாக்குதலுக்கு தீவிரவாதிகள் திட்டம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் தற்கொலைத் தாக்குதலை நடத்த 80 இற்கும் மேலான தீவிரவாதிகள் திட்டமிட்டிருப்பதாக அந்நாட்டு பாராளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் என்றும், ரஷ்யாவில் தீவிரவாதச் சம்பவங்களை நிகழ்த்த அனுப்பப்பட இருக்கிறார்கள் எனவும் எப்.எஸ்.பி இயக்குனர் நிகோலய்தெரிவித்தார் ரஷ்யாவுக்குள் எந்த வழியில் ஊடுருவப் போகிறார்கள் எனத் தெரியவில்லை. ஆனால் இதனால் நிறையப் பிரச்சினைகள் ஏற்டலாம் இதுவரை தீவிராவதிகளின் 200திட்டங்களை முறியடித்திருக்கிறோம் என்று அவர் கூறினார்



ஈரான் சனாதிபதி மொகமட் கதாமி பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஒன்றை முடித்துக்கொண்டு அமைச்சர்கள் சூழ வெளியேறுகின்றார்.

# முஷாரப் இரு பதவிகளையும் தக்க வைக்க எதிர்க் கட்சிகளின் ஆதரவைக் கோரல்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் சனாதிபதி மற்றும் இராணுவத் தளபதியென இரண்டு பதவிகளிலும் நீடிப்பதற்கு ஆதரவு கோரி முன்னாள் பிரதமருடன் அந் நாட்டு அரசு நிர்வாகம் இரகசிய பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது.

பல்வேறு ஊழல் வழக்குகள் காரணமாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ தற்போது பீகாரில் வசித்து வருகிறார். இரு வழக்குக்ளுக்காக அவரது கணவன் பாகிஸ்தான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இந் நிலையில் இரு பதவிகளை முஷாரப் தொடர்ந்து நீடிக்க பாராளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.ஆனால் முக்கிய எதிர்க் கட்சிகள் இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். இந் நிலையில் பாகிஸ்தான் நிர்வாகம் பெனாசீருடன் இரகசிய பேச்சு வார்த்தை நடத்தியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இரு பதவிகளிலும் முஷாரப் நீடிக்க ஆதரவு தருவதாக இருந்தால் பெனாசீர் பாகிஸ்தான் திரும்பலாம் எனவும் அவரது கணவர் விடுதலை செய்யப்படுவார் எனவும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட சூடான் மறுப்பு

சூடான் அரசாங்கம் தமது மேற்குப் பகுதி வன்முறைகளுக்கு முடிவு கட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட மறுத்துள்ளது.. இவ் உடன்படிக்கை டார்பூர் கிளர்ச்சியாளர்களுக்கு கூடுதலான சலுகைகளை வழங்கும் வகையில் பக்கசார்பாக வடிவமைக்கப்பட்டிருக்கிறதென பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட சூடானிய அரசு தரப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளல் கார்த்திகை –2004

## நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவு

1யா/ந/23 திரு.சுந்தரம் மார்க்கண்டு.
2யா/ந/32 திரு.நமசிவாயம் பொன்னுத்துரை.
3யா/ந/62 திரு.மயில்வாகனம் சோமசுந்தரம்.
4யா/ந/95 திரு.மார்க்கண்டு ஞானசுந்தரம்.
5யா/ந/101 திரு.சிவக்கொழுந்து கந்தையா.
6யா/ந/122 திரு.செல்லர் பொன்னையா.
7யா/ந/126 திரு.சபாபதி பரமநாதன்.
8யா/ந/128 திரு.செல்லப்பா பேரம்பலம்.
9யா/ந/132 திரு.பொன்னம்பலம் இராசையா.
10யா/ந/134 திரு.இராசையா இராசநாயகம்.
11யா/ந/206 திரு.தம்பையா சீவரத்தினம்.
12யா/ந/226 திரு.பொன்னையா அரியரத்தினம்.
13யா/ந/274 திரு.கந்தையா இரத்தினம்.
14யா/ந/285 திரு.அப்பாப்பிள்ளை சுப்பையா.
15யா/ந/ 343 திரு.சின்னத்தம்பி முத்தையா.
16யா/ந/393 திரு.செல்லையா இராசையா.
17யா/ந/434 திரு.கதிரவேலு சுந்தரம்பிள்ளை.
18யா/ந/475 திரு.குயின்ரின் செல்வகுமார் யேசுதாசன்.
19யா/ந/ 492 திரு.சுப்பையாநாகலிங்கம்.
20யா/ந/507 திரு.ஐயாத்துரை இராசதுரை.
21யா/ந/522 திரு.செங்காரப்பிள்ளைசொக்கலிங்கம்.
22யா/ந/545 திரு.தம்பிப்பிள்ளை தயாளரட்ணம்.
23யா/ந/575 திரு.வல்லிபுரம் கதிர்த்தம்பி.
24யா/ந/ 628 திரு.செல்லையா சிவஞானம்.
25யா/ந/725 திரு.கார்த்திகேசு மதியாபரணம்.
26யா/ந/786 திரு.சுப்பிரமணியம் பரமேஸ்வரன்.
27யா/ந/808 திரு.சடாச்சரம் சோமலிங்ககுமார்.
28யா/ந/809 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
29யா/ந/894 திரு.வீரசிங்கம் கனகரத்தினம்.
30யா/ந/910 திரு.தாமேதரம்பிள்ளைவைத்திலிங்கம்.
31யா/ந/917திரு.பரராஜசிங்கம் பாலசிங்கம்.
32யா/ந/947திரு.வல்லிபுரம் காளிதாசன்.
33யா/ந/999 திரு.சரவணமுத்து பொன்னம்பலம்.
34யா/ந/1004 திரு.நல்லதம்பி பசுபதிப்பிள்ளை.
35யா/ந/1009 திரு.கந்தையா பொன்னுத்துரை.
36யா/ந/1015 திருமதி.லீலாவதி ராஜசிங்கம்.
37யா/ந/1057 திரு.சின்னத்துரை தயாபரன்.
38யா/ந/1067 திருமதி.சின்னத்தங்கச்சி நாகரத்தினம்.
39யா/ந/1083 திரு.முத்துத்தம்பி சுகிர்தலிங்கம்.
40யா/ந/1110 திரு.நாகலிங்கம் திருவிளங்கம்.
41யா/ந/1127திரு.ஆசைப்பிள்ளை அழகக்கோன்.
42யா/ந/1129 திருமதி.கேதீஸ்வரி கந்தப்பசேகரம்.
43யா/ந/1142 திரு கந்தையா கதிர்காமத்தம்பி.
44யா/ந/1152 திரு.செல்லத்துரை கனகரெத்தினம்.
45யா/ந/1160 திருமதி.யோகம்மா கந்தையா.
46யா/ந/1203 திரு.கிருஷ்ணபிள்ளை நாகராசா.
47யா/ந/1232 திரு.கார்த்திகேசு இரத்தினசபாபதி.
48யா/ந/1256 திரு.கனகரத்தினம் சோமசுந்தரம்.
49யா/ந/1279 திருமதி.சுந்தரலட்சுமி நடராசா.
50யா/ந/1296 திரு.சபாரத்தினம் வேலும்மயிலும்.
51யா/ந/1320 திரு.சின்னத்துரை கனகரத்தினம்.
52யா/ந/1342 திருமதி.இராசலட்சுமி முத்துக்குமாரு
53யா/ந/ 1366 செல்வி.செல்வராணி நடராஜா.
54யா/ந/ 1397 திரு.செல்லமாணிக்கம் சுப்பிரமணியம்.
55யா/ந/1419 திரு.லூதர்ஜோர்ஜ் இராஜரட்ணம்.
56யா/ந/ 1424 திருமதி.யோகம்மா சிவகுருநாதன்
57யா/ந/ 1437 திருமதி.இரத்தினபூசணம் சின்னத்துரை.
58யா/ந/ 1439 திரு.வல்லிபுரம் முத்துக்குமாரு.
59யா/ந/ 1440 திரு.குமாரசாமி ராஜ்குமார்.
60யா/ந/ 1451 திரு.முத்தையா கணபதிப்பிள்ளை.
61யா/ந/1457 திரு.சின்னத்தம்பி நாகராசா
62யா/ந/1461 திருமதி.கிருபைமலர் பொன்னுத்துரை.
63யா/ந/ 1491 திரு.செல்லத்துரை வைரமுத்து
64யா/ந/ 1528 திரு.செல்லத்துரை இராசையா.
65யா/ந/ 1585 திரு.கந்தையா கனகரத்தினம்
66யா/ந/ 1594 திரு.கந்தையா கதிரவேலு.
67யா/ந/ 1604 திருமதி.புவனேஸ்வரி மாசிலாமணி.
68யா/ந/ 1609 திருமதி.மீனாட்சியம்மா நடராஜசர்மா.
69யா/ந/ 1654 திரு.வேலுப்பிள்ளை இராசையா.
70யா/ந/ 1665 திரு.சின்னத்தம்பி இராசையா.
71யா/ந/ 1729 திருமதி.தங்கம்மா கந்தையா.
72யா/ந/ 1756 திரு.மோர்சஸ் ஜெயராசா.
73யா/ந/ 1795 திரு.வீரகத்தி இராசையா.
74யா/ந/ 1858 திரு.மாணிக்கம் இளையவன்.
75யா/ந/1886 திரு.ஆறுமுகம் கனகலிங்கம்.
76யா/ந/ 1894 திரு.இராசா கனகசபாபதி.
77யா/ந/ 1897 திரு.தாமோதரம்பிள்ளை கிருஷ்ணசாமி.
78யா/ந/ 1903 திரு.நாகலிங்கம் காசிப்பிள்ளை.
79யா/ந/ 1924 திரு.சங்கரப்பிள்ளை மயில்வாகனம் மகேசன்.
80யா/ந/ 1960 திரு.சிறிரங்கம் பொன்னையா.
81யா/ந/ 1982 திரு.முத்துவேல் பஞ்சாட்சரம்.
82யா/ந/ 1985 திரு.அருணாசலம் பரமநாதன்
83யா/ந/2002 திரு.நல்லதம்பி இராசரத்தினம்.
84யா/ந/ 2008 திரு.வைத்திலிங்கம் இரத்தினம்.
85யா/ந/ 2020 திரு.பொன்னையா செல்வராசா.
86யா/ந/ 2053 திரு.இராமலிங்கம் சுப்பிரமணியம்.
87யா/ந/ 2094 திரு.சிதம்பரநாதர் தம்பு.
88யா/ந/ 2119 திரு.றப்பியேல் பர்னாந்து. அருளானந்தம்.
89யா/ந/2140 திரு.மத்தேசு யோண்.
90யா/ந/ 2151 திரு.சிமியோன் குருசுமுத்து.
91யா/ந/ 2186 திரு.ஆறுமுகம் கந்தசாமி.
92யா/ந/ 2230 திரு.வே.முத்தையா பேரம்பலம்.
93யா/ந/ 2247 திரு.இராமுப்பிள்ளை பொன்னம்பலம்.
94யா/ந/ 2259 திரு.துரையப்பா பஞ்சரத்தினகோபால்.
95யா/ந/ 2303 திரு.பொன்னம்பலம் சீவரத்தினம்.
96யா/ந/ 2374 திரு.கந்தையா திருச்செல்வம்.
97யா/ந/ 2375 திருமதி.தெய்வானை கனகசபை.
98யா/ந/2392 திரு.வல்லிபுரம் வைத்திலிங்கம்.
99யா/ந/ 2402 திருமதி.அன்னபூரணம் நாகரத்தினம்.
100யா/ந/ 2418 திரு.பொன்னையா மார்க்கண்டு.
101யா/ந/ 2434 திருமதி.இரத்தினபூபதி இராமநாதன்.
102யா/ந/2436 திரு.பஞ்சாட்சரக்குருக்கள் சர்வேஸ்வரக்குருக்கள்.
103யா/ந/ 2440 திருமதி.சற்குணவதி நாகலிங்கம்.
104யா/ந/2463 திரு.பொன்னம்பலம் வேலாயுதபிள்ளை.
105யா/ந/2536 திரு.வேலுப்பிள்ளை துரையப்பா.
106யா/ந/ 2552 திரு.சீனியர் வீரவாகு.
107யா/ந/ 2569 திருமதி.பவளம் பாலசிங்கம்.
108யா/ந/ 2600 திரு.வைத்திலிங்கம் கந்தையா.
109யா/ந/ 2609 திரு.சீவரத்தினம் கனகசபாபதி.
110யா/ந/2637 திரு.சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை.
111யா/ந/ 2669 திரு.நாகலிங்கம் இராசரத்தினம்.
112யா/ந/2695 திரு.சின்னையா சிவஞானம.
113யா/ந/ 2722 திரு.சுப்பையா சோமசுந்தரம்.
114யா/ந/ 2769 திரு.இலங்கையர் வேலாயுதம்.
115யா/ந/ 2771திரு.கந்தர் வைத்திலிங்கம்.
116யா/ந/ 2782 திரு.சபாரட்ணம் அருளம்பலம்.
117யா/ந/ 2790 திரு.சுப்பிரமணியம் அருளானந்தம்.
118யா/ந/ 2818 திரு.முத்தையா கைலாசபிள்ளை.
119யா/ந/ 2868 திரு.வயித்தியநாதர் தம்புநல்லையா.
120யா/ந/ 2891 திருமதி.பத்மாசனி இராசையா.
121யா/ந/2893 திரு.சுப்பையா பஞ்சரத்தினம்.
122யா/ந/ 2900 திரு.மாணிக்கம் சம்பந்தர் பிரான்சிஸ்.
123யா/ந/ 2919 திரு.வல்லிபுரம் இராசையா.
124யா/ந/ 2953 திரு.சரவணமுத்து சதாசிவம்.
125யா/ந/ 3127 திரு.சின்னத்துரை கைலாசபிள்ளை.
126யா/ந/ 3141 திரு.வல்லிபுரம் மகேசன்.
127யா/ந/ 3168 திரு.சபாபதிப்பிள்ளை நடேசர்.
128யா/ந/ 3177 திரு.மத்தேசு பொன்னுத்துரை.
129யா/ந/ 3198 திரு.விசுவலிங்கம் பஞ்சரத்தினம்.
130யா/ந/ 3244 திருமதி.செல்லம்மா பொன்னுத்துரை.
131யா/ந/ 3315 திரு.வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை சண்முகராசா.
132யா/ந/ 3330 திரு.சுப்பிரமணியம் தாமோதரப்பிள்ளை.
133யா/ந/ 3350 திரு.பொன்னுச்சாமி தருமலிங்கம்.
134யா/ந/ 3382 திருமதி.யோகம்மா கைலாசபிள்ளை.
135யா/ந/ 3426 திரு.கந்தையா இராசையா.
136யா/ந/ 3457 திரு.சின்னையா குமாரசூரியர்.
137யா/ந/ 3459 திரு.சண்முகம் சின்னப்பு இராமசாமி.
138யா/ந/ 3527 திருமதி.பரிபூரணம் சின்னத்துரை.
139யா/ந/ 3549 திரு.வேலுப்பிள்ளை சபாரத்தினம்.
140யா/ந/ 3552 திரு.சக்கரியாஸ் சந்தியப்பிள்ளை.
141யா/ந/ 3567 திரு.மாதன் சரவணமுத்து.
142யா/ந/ 3614 திரு.வைத்திலிங்கம் .நடராசா மாணிக்கவாசகர்.
143யா/ந/ 3684 திரு.முத்துலிங்கம் தங்கராசன்.
144யா/ந/ 3697 திரு.கனகசபை இரங்கநாதன்.
145யா/ந/ 3712 திரு.தங்கமுத்து நாகலிங்கம்.
146யா/ந/ 3734 திரு.சுப்பிரமணியம் சத்தியநாதன்.
147யா/ந/ 3779 திரு.தம்பு தர்மலிங்கம்.
148யா/ந/ 3783 திரு.சின்னத்தம்பி சச்சிதானந்தம்.
149யா/ந/ 3793 திரு.இரத்தினம் நவரத்தினம்.
150யா/ந/ 3821திருமதி.புவனேஸ்வரி சிவனேசன்.
151யா/ந/ 3826 திரு.கனகசபை .சிவகுருநாதர் தாமோதரம பிள்ளை.
152யா/ந/ 3860 திரு.செல்லையா பழனித்துரை.
153யா/ந/ 3866 திரு.சின்னத்துரை இலங்கநாதன்.
154யா/ந/ 3879 திரு.செல்லையா பொன்னுத்துரை.
155யா/ந/ 3883 திரு.செல்லையா செல்வப்பிரகாசம்.
156யா/ந/ 3921 திருமதி.அன்னம்மா இராமசாமி.
157யா/ந/ 3950திரு.சுப்பிரமணியம் நடராசா.
158யா/ந/ 3973 திரு.மயில்வாகனம் மகேந்திரன்.
159யா/ந/ 3979 திரு.பொன்னையா கந்தசாமி.
160யா/ந/ 3998 திருமதி.கமலாதேவி நடராசா.
161யா/ந/ 4037 திரு.மார்க்கண்டு இராசேந்திரம்.
162யா/ந/ 4064 திரு.சின்னத்தம்பி குமாரசாமி.
163யா/ந/ 4067 திருமதி.கமலாசினி சின்னையா
164யா/ந/ 4097 திரு.செல்லத்துரை முத்துக்குமாரு.
165யா/ந/ 4103 திருமதி.புவனேஸ்வரி அம்பலவாணர்.
166யா/ந/ 4131 திரு.சங்கரப்பிள்ளை செல்வரெத்தினம்.
167யா/ந/ 4140 திரு.கந்தப்பு தாமோதரம்பிள்ளை.
168யா/ந/ 4150 திருமதி.சிவபாக்கியம் சிவஞானசுந்தரம்.
169யா/ந/ 4163 திரு.வீரகத்தி சண்முகரத்தினம்.
170யா/ந/ 4205 திருமதி.லீலாவதி நடராசா.
171யா/ந/ 4298 திரு.கந்தையா சின்னையா.
172யா/ந/ 4315 திரு.நாகலிங்கம் சின்னத்துரை.
173யா/ந/ 4321திரு.இளையதம்பி நடராசா.
174யா/ந/ 4333 திரு.வைரவநாதர் ஞானானந்தன்.
175யா/ந/ 4367 திரு.செல்லர் சிவராசா.
176யா/ந/ 4394 திரு.தம்பிமுத்து தம்பிநாதன்.
177யா/ந/ 4420 திரு.பொன்னம்பலம் நடராசா.
178யா/ந/ 4492 திரு.கந்தையா சண்முகம்.
179யா/ந/ 4493 திரு.ஜோசப் தேவசகாயம்.
180யா/ந/ 4524 திருமதி.லக்சுப கந்தசாமி.
181யா/ந/ 4571 திரு.கணபதி செல்லத்துரை.
182யா/ந/ 4586 திரு.வீரவாகு ஐயாத்துரை.
183யா/ந/ 4589 திரு.ஆறுமுகம் கணபதிப்பிள்ளை.
184யா/ந/ 4628 திரு.அம்பலவாணர் கண்ணுத்துரை.
185யா/ந/ 4656 திரு.அப்புக்குட்டி தம்பிஐயா.
186யா/ந/ 4689 திருமதி.கமலேஷ்வரி இரத்தினசிங்கம்.
187யா/ந/ 4708 திரு.தம்பையா கனகராஜா.
188யா/ந/ 4751 திருமதி.கனகாம்பிகை சிவசிவாப்பிள்ளை.
189யா/ந/ 4767திருமதி.நித்தியானந்தராணி முத்துக்குமாரசாமி.
190யா/ந/ 4780 திரு.மதியாபரணம் குணரட்ணம்.
191யா/ந/ 4784 திரு.ஆறுமுகம் இராசரத்தினம்.
192யா/ந/ 4808 திரு.தில்லையம்பலம் பரம்ஜோதி.
193யா/ந/ 4833 திரு.கனகசபை செல்லையா.
194யா/ந/4836 திருமதி.நளினாதேவி சுகுமாரன்.
195யா/ந/ 4848 திருமதி.சத்தியவல்லி நடராசா.
196யா/ந/ 4895 திரு.கந்தையா நாகலிங்கம்.
197யா/ந/ 4910 திரு.செல்லத்துரை விநாயகமூர்த்தி.
198யா/ந/ 4920 திரு.அப்பாத்துரை நடராசா.
199யா/ந/ 4928 திருமதி.இரத்தினம் கனகரத்தினம்.
200யா/ந/ 4946 திருமதி.மலர் செல்வராஜா.
201யா/ந/ 4948 திரு.பொன்னுச்சாமி பாலசுப்பிரமணியம்.
202யா/ந/ 4963 திரு.அருணாசலம் முத்துத்தம்பி.
203யா/ந/ 4974 திரு.துரைசிங்கம் நடராசா.
204யா/ந/ 4976 திரு.றொஜேஸ் அரசரட்ணம் ஜோசப்.
205யா/ந/ 5022 திருமதி.சிவகாமிப்பிள்ளை சுப்பிரமணியம்.
206யா/ந/ 5099 திரு.மயில்வாகனம் சிவகுமார்.
207யா/ந/ 5125 திரு.வேலாயுதர் சின்னத்தம்பி.
208யா/ந/ 5148 திருமதி.இராசம்மா நடராசா.
209யா/ந/ 5184 திரு.கந்தையா தருமலிங்கம்.
210யா/ந/ 5379 திரு.கதிரிப்பிள்ளை சீனிவாசகம்
211யா/ந/ 5384 திரு.முருகேசு சுப்பிரமணியம்
212யா/ந/ 5386 திரு.அருணாசலம் கனகரட்ணம்.
213யா/ந/ 5426 திரு.முருகேசு தம்பிஐயா.
214யா/ந/ 5479 திரு.சின்னத்தம்பி மாசிலாமணி.
215யா/ந/ 5509 திரு.சோமசுந்தரம் பொன்னுத்துரை.
216யா/ந/ 5577திரு.பசுபதிக்குருக்கள் இராமலிங்கக்குருக்கள்
217யா/ந/ 5604 திரு.கார்த்திகேசு பாலசிங்கம்.
218யா/ந/ 5610 திரு.கணபதிப்பிள்ளை மயில்வாகனம்.
219யா/ந/ 5688 திரு.சீனிவாசகம் ஆனந்தசுந்தரம்.
220யா/ந/ 5724 திருமதி. சாயுச்சியம் தம்பிஐயா.
221யா/ந/ 5738 திரு.சின்னப்பு கனகரத்தினம்.
222யா/ந/ 5767 திரு.பண்டாரி பொன்னன்.
223யா/ந/ 5785 திருமதி.மனோன்மணி இராசதுரை.
224யா/ந/ 5787 திருமதி.சிவகங்கை சதாசிவம்.
225யா/ந/ 5839 திருமதி. இலட்சுஅம்மாள் பஞ்சாட்சரக் குருக்கள்.
226யா/ந/ 5872 திருமதி. இராஜேஸ்வரி கணபதிப்பிள்ளை.
227யா/ந/ 5873 திரு.சிவகுரு ஆனந்தராசா.
228யா/ந/ 5929 திரு.செல்லையா சிவசுப்பிரமணியம்.
229யா/ந/ 5938 திரு.சின்னத்துரை நடராசா.
230யா/ந/ 5958 திருமதி.விசாலாட்சி கந்தையா.
231யா/ந/ 5995 திரு.சபாபதிப்பிள்ளை பரராசசிங்கம்.
232யா/ந/ 5998 திரு.சுந்தரம் பாலசுப்பிரமணியம்.
233யா/ந/ 6053 திரு.அப்பாபிள்ளை சிதம்பரநாதன்.
234யா/ந/ 6055 திரு.தம்பிப்பிள்ளை இராசரத்தினம்.
235யா/ந/ 6059 திருமதி.மாணிக்கம் நடேசு.
236யா/ந/ 6083 திரு.சின்னையா இராசநாயகம்.
237யா/ந/ 6111 திருமதி.நாகம்மா கணபதி.
238யா/ந/ 6118 திரு.நாகர் குழந்தை.
239யா/ந/ 6167 திரு.வீரகத்தி தங்கராசா.
240யா/ந/ 6195 திரு.செல்லப்பா கனகசபை.
241யா/ந/ 6209 திரு.இளையதம்பி பொன்னையா.
242யா/ந/ 6219 திரு.பஞ்சாட்சரக்குருக்கள் இரத்தினசபாபதிக்குருக்கள்.
243யா/ந/ 6221 திருமதி.இரத்தினம்மா வேலாயுதபிள்ளை.
244யா/ந/ 6223 திரு. வயிரவநாதன் நடராசா.
245யா/ந/ 6231 திருமதி.கண்மணி இராசையா.
246யா/ந/ 6247 திரு.சண்முகம் சின்னக்கிளி.
247யா/ந/6249 திரு.கந்தையா செட்டியார் ஆறுமுகம்.
248யா/ந/ 6277 திரு.ஐயன் அப்புத்துரை.
249யா/ந/ 6313 திரு.சுப்பையா கணேசபிள்ளை.
250யா/ந/ 6334 திரு.செல்லையா சதாசிவம்.
251யா/ந/ 6341திரு. பொன்னம்பலம் செல்வரத்தினம்.

# தமிழீழ மீட்புநிதிக்கடன் மீளல் கார்த்திகை -2004

252யா/ந/6354 திரு. செல்லப்பா பரமு.
253யா/ந/6366 திருமதி. சின்னம்மா நடராஜா.
254யா/ந/6426 திரு. செல்லையா கந்தசாமி.
255யா/ந/6469 திருமதி. பொன்னம்மா வல்லிபுரம்.
256யா/ந/6473 திருமதி. இராசம்மா செல்லத்துரை.
257யா/ந/6476 திரு. சண்முகம் சின்னையா.
258யா/ந/6490 திரு. சண்முகப்பிள்ளை மயில்வாகணம்.
259யா/ந/6537 திரு. வேலுப்பிள்ளை சிவராமலிங்கம்.
260யா/ந/6543 திரு. செல்லையா கனகசபாபதி.
261யா/ந/6564 திருமதி. கனகம்மா குணரத்தினம்.
262யா/ந/6636 திருமதி. செல்லம்மா சுப்பிரமணியம்.
263யா/ந/6673 திரு. யோசேப் அப்புத்துரை.
264யா/ந/6692 திருமதி. பாக்கியம் வைத்திலிங்கம்.
265யா/ந/ 6706 திரு. தம்பு இரத்தினலிங்கம்.
266யா/ந/6728 செல்வி. லிசிஞானமணி தம்பையா.
267யா/ந/6735 திரு. ஆறுமுகம் ஐயாத்துரை.
268யா/ந/6737 செல்வி. சௌந்தரராணி யூகன்.
269யா/ந/6822 திரு. அம்பலவாணர் சுந்தரராசா.
270யா/ந/6837 திரு. வல்லிபுரம் செல்லத்துரை.
271யா/ந/6870 திரு. மாரியப்பா நாகரட்ணசெட்டியார்.
272யா/ந/6912 திருமதி. சரஸ்வதி நல்லையா.
273யா/ந/6937 திரு. பொன்னையா பாலச்சந்திரன்.
274யா/ந/6948 திரு. கனகசபை திருநாவுக்கரசு.
275யா/ந/6955 திரு. ஆறுமுகசாமி குகேந்திரா.
276யா/ந/6971 திரு. செல்லப்பா மயில்வாகனம்.
277யா/ந/6972 திருமதி. நேசராணி சின்னையா.
278யா/ந/6994 திரு. வயிரமுத்து பொன்னையா.
279யா/ந/7011திருமதி.தீபகாந்திஅம்மாஇரத்தினசபாபதி.
280யா/ந/7019 திரு. செல்லத்துரை சபாரத்தினம்.
281யா/ந/7029 திரு. பரமசாமி சேதுப்பிள்ளை.
282யா/ந/7088 திரு. செல்லப்பா ஆறுமுகம்.
283யா/ந/7120 திரு. முத்தையா செல்வராஜா.
284யா/ந/7135திருமதி. ஞானரட்ணம்மாள் சின்னத்தம்பி.
285யா/ந/7137 திருமதி. சரஸ்வதி சுயம்புலிங்கநாதன்.
286யா/ந/7216 திருமதி. செல்வமணி தவரட்ணசிங்கம்.
287யா/ந/7217 திருமதி. நாகம்மா கந்தசாமி.
288யா/ந/7221 திருமதி. சிவபாக்கியம் கந்தையா.
289யா/ந/7224 திரு. இராசலிங்கம் நடராசா.
290யா/ந/7297 திரு. செல்லப்பா செல்வராஜா.
291யா/ந/7304 திருமதி. திரேசா ஜோசப்.
292யா/ந/7344 திரு. வேலுப்பிள்ளை சதாசிவம்.
293யா/ந/7382 திருமதி. மாணிக்கம் வள்ளியம்மை.
294யா/ந/7405 திரு. கதிரவேல் விவேகானந்தன்.
295யா/ந/7408 திருமதி. கமலாதேவி சுந்தரலிங்கம்.
296யா/ந/7410 திருமதி. சின்னாச்சி தம்பு.
297யா/ந/7416 திரு. சி.பொன்னையா மயில்வாகனம்.
298யா/ந/7465 திரு. அருணாசலம் இராசகுலபாலசூரியர்.
299யா/ந/7506 திரு. வீரகத்தி பரமநாதன்.
300யா/ந/7541 திரு. துரைராசா புலேந்திரன்.
301யா/ந/7573 திரு. கனகரட்ணம் பூபாலசிங்கம்.
302யா/ந/7606 திரு. வைரவப்பிள்ளை சபாபதி.
303யா/ந/ 7624 திரு. வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்.
304யா/ந/7685 திரு. யோசப் அன்ரன் பிறின்ஸ்.
305யா/ந/7692 திரு. முத்து கந்தையா.
306யா/ந/7732 செல்வி. செல்வராணி சோமசுந்தரம்.
307யா/ந/7752 திருமதி. அருளம்மா சின்னத்துரை.
308யா/ந/7765 திருமதி. நாகரத்தினம் இராசசுந்தரம்.
309யா/ந/7767திரு. துரையப்பா இராசையா.
310யா/ந/7779 திரு. சதாசிவம் தர்மலிங்கம்.
311யா/ந/7796 திரு. ஆறுமுகம் சுப்பிரமணியம்.
312யா/ந/7821 திரு. சிவராமலிங்கம் மகேசன்.
313யா/ந/7840 திரு. பெனடிற் இம்மானுவல் சபாரட்ணம்.
314யா/ந/7854 திரு. தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை.
315யா/ந/7860 திரு. வைத்திலிங்கம் சுந்தரமூர்த்தி.
316யா/ந/7861 திரு. கதிரவேலு சுப்பிரமணியம்.
317யா/ந/7862 திரு. நல்லையா இராசநாயகம்.
318யா/ந/7867 திரு. பரமு தாமோதரம்பிள்ளை.
319யா/ந 7871 திரு. இரத்தினசபாபதி தவபாலன்.
320யா/ந/7875 திருமதி. ஜெயராணி கனகசூரியர்.
321யா/ந/7888 திருமதி. றோகினிஅம்மா மயில்வாகனம்.
322யா/ந/7921 திரு. தம்பிராசா குருசாமி.
323யா/ந/7922 திரு. ஆறுமுகம் கந்தசாமி.
324யா/ந/7944 திருமதி. மேரிஜெபமணி முத்தையா.
325யா/ந/7960 திருமதி. இரத்தினம் கந்தையா.
326யா/ந/7979 திரு. இளையவி முருகேசு.
327யா/ந/8024 திருமதி. சுந்தரம் சோமசுந்தரம்.
328யா/ந/8045 திருமதி. பிரகாசியம்மா தோமஸ்.
329யா/ந/8079 திருமதி. நாகேஸ்வரி திருநாவுக்கரசு
330யா/ந/8097 திரு. சின்னத்தம்பி கந்தையா.
331யா/ந/8106 திருமதி. பொன்னையா யோகம்மா.
332 யா/ந/ 8124 திரு. சூசைப்பிள்ளை அன்ரனி செல்வரட்ணம்.
333 யா/ந/8131 திருமதி. செல்லம்மா பொன்னுத்துரை.
334 யா/ந/8133 திருமதி. ஞானம்மா சின்னப்பு.
335 யா/ந/8244 திருமதி. நல்லம்மா துரையப்பா.
336 யா/ந/8245 திருமதி. வீரலட்சுமி சிதம்பரப்பிள்ளை.
337 யா/ந/8255 திரு. மாதர் இளையதம்பி.
338 யா/ந/8258 திரு. தம்பித்துரை பாலகெங்காதரசிவம்.
339 யா/ந/8267 திரு. வேலன் துரையப்பா.
340 யா/ந/8302 திரு. வீரகத்தி சோமசுந்தரம்.
341 யா/ந/8312 திருமதி. ஞானம்பாள் சண்முகநாதன்.
342 யா/ந/8337 திரு. சீனிக்குட்டி சபாரெத்தினம்.
343 யா/ந/8365 திரு. விசுவலிங்கம் குமாரசாமி.
344 யா/ந/8402 திரு. நாகலிங்கம் பெருமாள்பிள்ளை.
345 யா/ந/8407 திரு. கதிரிப்பிள்ளை சிவசம்பு.
346 யா/ந/8410 திரு. நாகராசா ஸ்ரீதரன்.
347 யா/ந/8416 திருமதி. செல்லம்மா சின்னையா.
348 யா/ந/8460 திரு. நல்லதம்பி சிவசுப்பிரமணியம்.
349 யா/ந/8486 திரு. மகேஸ்வரக்குருக்கள் செந்தில்நாதசர்மா.
350 யா/ந/8534 திரு. கந்தசாமி கணேசலிங்கம்.
351 யா/ந/8540 திரு. முருகேசு தம்பிராஜா.
352 யா/ந/8592 திரு. சபாரட்ணம் சண்முகசுந்தரம்.
353 யா/ந/8621 திருமதி. கமலாதேவி புலேந்திரன்.
354 யா/ந/8625 திரு. வைரவிப்பிள்ளை மாணிக்கம்.
355 யா/ந/8636 திருமதி. சிவபாக்கியம் கணேசபிள்ளை.
356 யா/ந/8655 திரு. சுப்பிரமணியம் இரத்தினசபாபதி.
357 யா/ந/8656 திருமதி. நடராஜா மகேஸ்வரி.
358 யா/ந/8688 திரு. முருகன் சின்னத்தம்பி.
359 யா/ந/8726 திருமதி. மரகதம் சபாரத்தினம்.
360 யா/ந/8742 திரு. அருணாசலம் பொன்னையா.
361 யா/ந/8771 திருமதி. இரத்தினம் அப்புத்துரை.
362 யா/ந/8840 திருமதி. பிள்ளையம்மா கந்தசாமித்துரை.
363 யா/ந/8859 திருமதி. சகுந்தலாதேவி கந்தையா.
364 யா/ந/8876 திரு. தம்பையா நடராசா.
365 யா/ந/8891 திரு. ஏரம்பு சிவசுப்பிரமணியம்.
366 யா/ந/8903 திருமதி. செல்லம்மா சுந்தரம்.
367 யா/ந/ 8952 திருமதி. மகேஸ்வரி சந்திரலிங்கம்.
368 யா/ந/8962 திரு. வைத்திலிங்கம் அம்பலம்.
369 யா/ந/8969 திரு. செல்லத்துரை ஞானசேகரம்.
370 யா/ந/9029 திரு. கனகர் செல்லத்துரை.
371 யா/ந/9040 திருமதி. சிவஞானம்மா வீரசிங்கம்.
372 யா/ந/9043 திரு. முருகேசு பொன்னம்பலம்.
373 யா/ந/9061 திரு. ஆறுமுகம் வயித்தலிங்கம்.
374 யா/ந/9064 திருமதி. சரஸ்வதி அருளானந்தம்.
375யா/ந/9090 திருமதி. இராசமணி கார்த்திகேசு.
376 யா/ந/9092 திரு. சிவகுரு நாகேந்திரம்.
377 யா/ந/9294 திரு. கனகசபை சீவரத்தினம்.
378 யா/ந/ 9312 திரு. சதாசிவம் குலசேகரம்
379 யா/ந/9348 திரு. ஐயாத்துரை குமரதாசன்.
380 யா/ந/9360 திரு. சின்னத்தம்பி வேலாயுதம்.
381 யா/ந/9366 திரு. நாகலிங்கம் அழகரத்தினம்.
382 யா/ந/9371 திரு. நாகலிங்கம் நடராசா.
383 யா/ந/9377 செல்வி. புஸ்பராணி சுப்பிரமணியம்.
384 யா/ந/9387 திரு. நாகமணி வைரமுத்து.
385 யா/ந/9393 திரு. சிவசம்பு செல்லையா.
386 யா/ந/ 9422 திரு.கந்தையா சச்சிதானந்தம் கோணேஸ்வரன்.
387 யா/ந/9466 திருமதி. பத்மாசனி இராசசூரியர்.
388 யா/ந/9485 திருமதி. சீதாலட்சுமி சம்பந்தமூர்த்தி.
389 யா/ந/9494 திரு. சபாரத்தினம் கந்தையா.
390 யா/ந/9521 திரு. வல்லிபுரம் இராசேந்திரம்.
391 யா/ந/ 9559 திருமதி. சரஸ்வதி கந்தையா.
392 யா/ந/9570 திருமதி. மகிழ்மலர் ஜெயசிங்கம்.
393 யா/ந/9590 திரு. பொன்னம்பலம் துரையப்பா.
394 யா/ந/9605திருமதி. நாகம்மா சின்னத்துரை.
395 யா/ந/9613 செல்வி. தங்கரட்ணம் செல்லையா.
396 யா/ந/9633 திரு. கதிரவேலு சுந்தரலிங்கம்.
397 யா/ந/9699 திரு. சிவகுரு செல்லத்துரை.
398 யா/ந/9720 திரு. செல்லப்பா பொன்னுத்துரை.
399 யா/ந/9748 திரு. செல்லையா சோமஸ்கந்தர்.
400 யா/ந/9750 திரு. முத்தையா மாணிக்கம்
401 யா/ந/9780 திருமதி. செல்வமணி துரைக்குட்டி.
402 யா/ந/9795 திருமதி. நாகம்மா தம்பிப்பிள்ளை.
403 யா/ந/9806 திருமதி. பொன்னு ஐயம்பிள்ளை.
404 யா/ந/9808 திருமதி. சிவயோகம் செல்வராசா.
405 யா/ந/9815 திரு. தம்பிள்ளை காசிலிங்கம்.
406 யா/ந/9876 திரு. நாகரத்தினம் மாணிக்கம்.
407 யா/ந/9923 திரு. சரவணமுத்து சுப்பிரமணியம்.
408 யா/ந/9924 திருமதி. சின்னத்தங்கச்சி கிஷ்ணபிள்ளை.
409 யா/ந/9950 திருமதி. சரஸ்வதி இரத்தினம்.
410 யா/ந/9953 திருமதி. சரஸ்வதி வேலுப்பிள்ளை.
411 யர்/ந/10050 திருமதி. பாக்கியம் அழகக்கோன்.
412 யா/ந/10093 திருமதி. புவனேஸ்வரி ரங்கநாதன்.
413 யா/ந/10109 திரு. கார்த்திகேசு சூரியகுமார்.
414 யா/ந/10144 திருமதி. ஜெகநாயகி அழகரத்தினம்.
415 யா/ந/10161 திரு. சுப்பிரமணியம் சிவராமலிங்கம்.
416 யா/ந/10210 திருமதி. இராசம்மா தாமோதரம்பிள்ளை.
417 யா/ந/10215 திரு. சீனியர் கந்தையா.
418 யா/ந/10220 திரு. குருநாதர் மாணிக்கம்.
419 யா/ந/10232 திருமதி. யூலியா இராசம்மா ஏபிரகாம்.
420 யா/ந/10310 திரு. சின்னத்தம்பி மார்க்கண்டு.
421 யா/ந/10347 திருமதி. தங்கம்மா தம்பிராசா.
422 யா/ந/10396 திருமதி. பத்மாவதி செல்வநாயகம்.
423 யா/ந/10412 திருமதி. ஜெபநேசம் கபிரியேல்.
424 யா/ந/10428 திருமதி. மீனாட்சி கந்தையா.
425 யா/ந/10460 திருமதி. அன்னலட்சுமி கந்தசாமி.
426 யா/ந/10472 திருமதி. இரத்தினம் நமசிவாயம்.
427 யா/ந/10489 திருமதி. அன்னலட்சுமி அம்பலவாணர்.
428 யா/ந/10499 திரு. வேலுப்பிள்ளை சதாசிவம்
429 யா/ந/10522 திருமதி. சின்னத்தங்கச்சி துரையப்பா.
430 யா/ந/10553 திரு. சிவசிதம்பரம்பிள்ளை பாலசிங்கம்.
431 யா/ந/10588 திருமதி. சிவக்கொழுந்து தம்பிப்பிள்ளை.
432 யா/ந/10603 திருமதி. இரத்தினம்மா இராசையா.
433 யா/ந/10619 திரு. முத்துவேலு மாணிக்கவாசகர்.
434 யா/ந/10630 திரு. சின்னையா சேனாதிராஜா.
435 யா/ந/10637 திருமதி. சிவபாக்கியம் நவரட்ணராஜா.
436 யா/ந/ 10744 திருமதி. செல்லக்கண்டு பொன்னையா.
437 யா/ந/ 10753 திருமதி. றெஜீனா பாக்கியமலர் இராசக்கோன்.
438 யா/ந/10769 திருமதி. மகேஸ்வரி ஞானசுந்தரம்.
439 யா/ந/10780 திருமதி. புஸ்பம் சுப்பிரமணியம்.
440 யா/ந/10783 திரு. சுப்பிரமணியம் சிங்காரவேலு.
441 யா/ந/10794 திருமதி. தனலெட்சுமி நடராசா.
442 யா/ந/10806 திருமதி. பூரணம் குணரத்தினம்.
443 யா/ந/10810 திருமதி. நாகம்மா நடராஜா
444 யா/ந/10811 திருமதி. சின்னத்தங்கச்சி சங்கரப்பிள்ளை.
445 யா/ந/10838 திருமதி. நீலாயதாட்சி பரமநாதன்.
446 யா/ந/10859 திரு. சண்முகம் சிவசுப்பிரமணியம்.
447 யா/ந/10885 திரு. பொன்னு அன்னலிங்கம்.
448 யா/ந/10901 திரு. முத்தர் ஆறுமுகம்.
449 யா/ந/10926 திருமதி. மனோன்மணிஅம்மாள் நாகநாதன்.
450 யா/ந/10931 திரு. வேலுப்பிள்ளை கனகசிங்கம்.
451 யா/ந/10967 திரு. திருமேனி பாலசுப்பிரமணியம்.
452 யா/ந/10981 திரு. மயில்வாகனம் சோமசுந்தரம்.
453 யா/ந/11019 திருமதி. யோகம்மா சின்னத்தம்பி
454 யா/ந/11053 திருமதி. பவானி சின்னத்தம்பி.
455 யா/ந/11083 திரு. செல்லப்பா அப்புத்துரை.
456 யா/ந/11087 திரு. சி[illegible]த்துரை திருநாவுக்கரசு.
457 யா/ந/11094 திருமதி. பா[illegible]பலெட்சுமி வைத்தியலிங்கம்.
458 யா/ந/11101 திரு. வே[illegible]தம் பொன்னம்பலம்
459 யா/ந/11153 திரு. கந்தர் சுப்[illegible]ணியம் கணபதிப்பிள்ளை.
460 யா/ந/11164 திருமதி. தங்[illegible]மா சிவராசா.
461 யா/ந/11227 திருமதி. இரத்தினம்மா பூபாலசிங்கம்.
462 யா/ந/ 11300 திரு. சிவக்கொழுந்து சிவானந்தன்.
463 யா/ந/11301 திருமதி. தங்கம்மா பொன்னுத்துரை.
464 யா/ந/11304 திருமதி. பாக்கியம் நடராசா.
465 யா/ந/11335 திருமதி. பாக்கியம் கதிரவேலு.
466 யா/ந/11338 திருமதி. நாகம்மா பொன்னம்பலம்.
467 யா/ந/11464 திருமதி. நாகேஸ்வரி சின்னத்தம்பி.
468 யா/ந/11492 திரு. முருகேசு சிவசம்பு.
469 யா/ந/11497 திரு. சபாரட்ணம் கந்தசாமி.
470 யா/ந/11498 திருமதி. அன்னபூரணம் பொன்னுத்துரை
471யா/ந/11499 திருமதி. ஏகாம்பிகை நடராசா.
472 யா/ந/11510 திரு. நாகலிங்கம் பரமலிங்கம்.
473 யா/ந/11547 திரு. மாணிக்கம் சீவரத்தினம்.
474 யா/ந/11556 திரு. மகாலிங்கம் செல்வமாணிக்கம்.
475 யா/ந/11603 திருமதி. பாக்கியம் கந்தையா.
476 யா/ந/11652 திருமதி. வள்ளிப்பிள்ளை இராசமணி.
477 யா/ந/11659 திரு. வல்லிபுரம் செல்லையா.
478 யா/ந/11662 திரு. சிதம்பரப்பிள்ளை சண்முகம்.
479 யா/ந/11667 திரு. கந்தையா இரத்தினசபாபதி.
480 யா/ந/11670 திரு. நாகலிங்கம் சீனிவாசகம்.
481 யா/ந/11672 திரு. கனகரத்தினம் பாலசிங்கம்.
482 யா/ந/11768 திரு. நமசிவாயம் வாமதேவன்.
483 யா/ந/11771 திரு. அருணாசலம் சரவணமுத்து.
484 யா/ந/11782 திரு. இராமுப்பிள்ளை ஆறுமுகம்.
485 யா/ந/11804 திருமதி. பிலோமினா சந்தியாகோ.
486 யா/ந/11832 திரு. ஞானிப்பிள்ளை குணரெட்ணம்.
487 யா/ந/ 11838 திரு. இராமுப்பிள்ளை வேலாயுதபிள்ளை.
488 யா/ந/11858 திருமதி. கிறேஸ்மேபல் நேசமலர் பொன்னுத்துரை.
489 யா/ந/11866திருமதி. இராசம்மா குமாரசாமி.

(தொடரும்)

# யோகர் சுவாமிகள் முதியோர் இல்லத்தில் நோய்வாய்ப்படும் முதியோரை கொண்டு செல்ல வாகனம் இல்லை



வன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் ஆண்களுக்கான நிரந்தர புதிய மண்டபம் ஒன்று வடகிழக்கு சமுகநலத்துறைத் திணைக்களத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டு வருவதை படத்தில் காணலாம். (கு.தீ)

## நிர்வாக உத்தியோகத்தர் கவலை

(அலுவலக செய்தியாளர்)

**ஐயானார்புரம் வன்னேரிக் குளத்தில் இயங்கிவரும் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் நோய்வாய்ப்படும் வயோதிபர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு வாகன வசதி இல்லை என அதன் நிர்வாக உத்தியோகத்தர் கவலை தெரிவித்துள்ளார்.**

மேற்படி முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஆண், பெண் இருபாலாரான முதியோர் நோய்வாய்ப்படும் வேளை உடனடியாக அவர்களை அக்கராயன் வைத்திய சாலைக்கோ அல்லது கிளிநொச்சி வைத்திய சாலைக்கோ எடுத்துச் செல்வதற்கு தமக்கு வாகனம் ஒன்று தேவைப்படுவதாகவும் அத்துடன் வைத்திய சாலைக்கு வரும் பிரதானவீதி மழைகாலத்திலும் சரி ஏனைய காலங்களிலும் சரி போக்குவரத்திற்கு பெரும் இடையூறாக அமைந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (கு.தீ)

# மாவீரர்நாளை முன்னிட்டு விசுவமடு தே.எ.பேரவை சந்திப்பு

(விசுவமடு)

மாவீரர்நாளை முன்னிட்டு விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் ஊரக எழுச்சிப் பேரவை பேராளர்கள் சந்திப்பு நிகழ்வு விசுவமடு பிரதேச அரசியல்துறைச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் வ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விசுவமடு மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் சீத்தாராம் மற்றும் விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் பு.திலகன் நிகழ்வின் தலைவர் பத்மநாதன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினார்கள். வரும் மாவீரர்நாள் தொடர்பான வேலைத்திட்டம். மற்றும் சிரமதானப் பணி வேலைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. (10)

# சுகாதார சேவையினரின் திடீர் நடவடிக்கையில் காலாவதியான மென்பானங்கள் கண்டுபிடிப்பு

(உடையார்கட்டு)

முல்லை மாவட்டத்தின் முல்லை நகரப்பகுதி, புதுக்குடியிருப்பு பகுதிகளில் உணவு கையாளும் நிலையங்களில் தமிழீழ சுகாதார சேவைகள் முல்லை மாவட்டப்பிரிவினர் திடீர் ஆய்வில் ஈடுபட்டனர்.

இதன்போது குளிர்சாதனப் பெட்டி, மற்றும் விற்பனைப் பகுதியில் காலாவதியான மென்பானங்கள் விற்பனைக்கு வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின்போது 250 இற்கு மேற்பட்ட மென்பானங்கள் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. காலாவதியான மென்பானங்கள் விற்பனை செய்த வாணிப உரிமையாளர் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பாக நுகர் வோர் மென்பானப் போத்தல்களில் பொறிக்கப்பட்டுள்ள (அச்சிடப்பட்ட) உற்பத்தித்திகதி, முடிவுத் திகதி ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்து கொள்வனவு செய்யுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் முல்லை மாவட்டத்தினர் கேட்டுக் கொள்வதோடு, பழுதடைந்த காலாவதியான உணவு விற்பனை செய்வதை இனங்கண்டு அறிவித்துதவுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (19)

## பனம் விதை நாட்டல்

வடமராட்சி கிழக்கில் பெரும் தொகையிலான பனை மரங்களை சிறிலங்கா இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் தறித்து அழித்துள்ளது. இப பனைமரத்தினை ஈடு செய்வதற்காக வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறை யின் அனுசரணையுடன் வடமராட்சிக்கிழக்கு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் கேடில், முள்ளியான் ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவில் உள்ள தரிசு நிலங்களில் 10000 பனம் விதைகள் நாட்டப்பட்டுள்ளன. (11)

# சுகாதார விழிப்புணர்வு பற்றி மாணவர்களுக்கு அறிவுரை

பாண்டியன்குளம் துணுக்காய் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் சுகாதாரக் கல்வி, விழிப்புணர்வுக் கருத்துக்களை வழங்கி வருகின்றனர்.

மழை காலங்களில் இலகுவாகப் பரவக்கூடிய நோய்கள் குறித்து இவர்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டதோடு அவற்றிலிருந்து பாதுகாப்புத் தேடுவது பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து இவ் விழிப்புணர்வுச் செயற்பாடு அப்பகுதி கிராமங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (24)

# வீதியில் திரியும் கட்டாக்காலி நாய்களால் பயணிகள் தொல்லை

கண்டாவளை விசுவமடுப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. வீதிகளில் வந்து படுத்துறங்கும் கட்டாக்காலி நாய்களால் உந்துருளி மற்றும் மிதிவண்டிகளில் பயணம் மேற்கொள்பவர்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

நாய்களின் பெருக்கமே நாய்களின் தொல்லைக்குக் காரணம் வளர்ப்பு நாய்கள் ஈனும் குட்டிகளை நாயின் உரிமையாளர்கள் வீதிகளில் அல்லது பொது இடங்களில் கொண்டுவந்துவிட்டுச் செல்வதால் நாய்கள் வீதிகளில் நின்று வாகனங்களில் நசியுண்டு சாவதையும் காணமுடிவதுடன் தப்பிய நாய்களின் பெருக்கம் அதிகரித்து வாகனங்களை விபத்திற்குள்ளாக்குகிறது.

பிரதேசசபையினர் இதில் கூடிய கவனம் எடுத்தால் நாய்களின் தொல்லையைக் குறைக்க முடியும் எனவும், இது இவ்வாறிருக்க நாய்களுக்கான இனப் பெருக்கத்தைத் தடுப்பதற்கு கால் நடை வைத்திய நிலையம் தமது சேவையை மேற்கொண்டால் நாய்களின் பெருக்கத்தைக் குறைக்க முடியும்.

நாய் வளர்ப்பாளர்களும் தமது பெண் நாய்களின் வளர்ப்பில் கூடிய கவனம் எடுத்து உரிய காலத்தில் இனப்பெருக்கத்தைத் தடுக்காவிடில் எலிகள் பெருகுவது போன்று நாய்களின் பெருக்கம் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப் படுகிறது. (10)

# "காற்றின் துளிர்கள்" தொகுப்பு நூல் கிளியில் சிறப்புற வெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

புலிகளின் குரலின் "காற்றின் துளிகள்" வெள்ளிப் பொழுது படைப்புக்களின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

கடந்த புதன் கிழமை மாலை 6.00 மணியளவில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் புலிகளின் குரல் துணைப்பொறுப்பாளர் செயல்வீரன் தலைமையில் ஆரம்பமாகிய நிகழ்வில் மங்கல விளக்கினை மூத்த பத்திரிகை யாளர் கோபு, கிளி/மாவட்ட அரசி யல் துறைப் பொறுப்பாளர் காண் டீபன், ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைக்க வரவேற்புரையினை புலிகளின் குரல் நிர்வாக இணைப்பாளர் இ.ராஜேஸ்வரன் நிகழ்த்தினார். தலைமையுரையினை அடுத்து வெளியீட்டுரையினைப் புலிகளின் குரல் பிரதம செய்தி ஆசிரியர் த.தவபாலன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து நூலை தமிழீழ காவல் துறைத்துணைப் பொறுப்பாளர். மாதவன் வெளியிட்டு வைக்க முதற் பிரதியினை தமிழீழ வைப்பகப் பணிப்பாளர் வீரத் தேவன் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து மதிப்பீட்டுரையினை கலாநிதி சோமஸ் கந்தன் நிகழ்த்தினார். இந்நூலின் படைப்பாளிகளைக் கௌரவிக்கும் முகமாக நூல்களை வழங்கியதோடு சிறப்புரையினை தமிழீழ அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி ஆற்றினார். நூலின் பதில் உரையினை தொகுப்பாசிரியர் பொன்காந்தன் நிகழ்த்தினார். நன்றியுரையினை மூத்த படைப்பாளர் ஆதிலட்சுமி சிவகுமார் நிகழ்த்தினார்.

தொடர்ந்து கலைநிகழ்வாக விடுதலைப் பறவைகள் இசைக் கலைஞர்களின் இசையும் இடம் பெற்றது. (தீ.கு)

# கிளி-புளியங்குளம் பேருந்து சேவையை அதிகரிக்க மக்கள் கோரிக்கை

(வவுனியா செய்தியாளர்)

கிளிநொச்சி-புளியங்குளம் பேருந்து சேவையை அதிகரிக்குமாறு பொதுமக்கள் கோருகின்றனர்.

கிளிநொச்சி-புளியங்குளம் பேருந்து சேவையின் முதல் பேருந்து கிளிநொச்சியிலிருந்து காலை 6.15 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றது. முகமாலையில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு வரும் இப்பேருந்து கிளிநொச்சியிலிருந்து 6.15மணிக்கு புறப்படுகின்றது. மாங்குளத்தைப் இப்பேருந்து தாண்டியதும் பாடசாலைப் பணியாகவும் தன்னை மாற்றிக்கொண்டு புளியங்குளத்தை வந்தடைய 8.30 மணி ஆகின்றது. காலை 6.30 மணிக்கு ஓமந்தை சோதனை நிலையம் திறக்கப்பட்டாலும் கிளிநொச்சியில் இருந்து வரும் பயணி ஒருவர் 8.30 மணிக்கே புளியங்குளத்தை வந்தடைய முடிகின்றது.

இப்பயணி வவுனியா நகரை வந்தடைய 9.30 மணி ஆகின்றது. நோய்காரணமாக வவுனியா வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளிகளும்,கடமையின்நிமித்தம் வவுனியாவிற்கு வருகை தரும் அரச ஊழியர்களும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்

இதனால் தமிழீழ போக்கு வரத்துக் கழகத்தினர் இது விடயத்தில் அதிகஅக்கறை செலுத்தி கிளிநொச்சியில் இருந்து காலை 5.00 மணிக்கு புளியங்குளத்திற்கான ஒரு சேவையை ஆரம்பிப்பதன் மூலம் நோயாளிகளும், அரச ஊழியர்களும், ஏனைய பொதுமக்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதால் இப் பேருந்து சேவையை ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் கோருகின்றனர். (10)

# ஆரம்பக் கல்விப் பிரிவு கணிதக் கண்காட்சி

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம், இரண்டாம் வருட ஆரம்பக்கல்விப் பிரிவு கணித கற்றல், கற்பித்தல் சாதனைக் கண்காட்சி கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெற்ற இக்கண்காட்சியில் கணிதத்தை இலகுவான முறையில் கற்பிக்கக் கூடிய பல உத்திகள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி பிரிவு ஆசிரியர்களும், மாணவர்களும் இக்கண் காட்சியினைப் பார்வையிட்டனர். (10)

# குப்பிவிளக்கு வழங்கிய கொமர்சல் வங்கி

(வவுனியா செய்தியாளர்)

கொமர்சல் வங்கியின் பாதுகாப்பான குப்பிவிளக்கு விநியோக திட்டத்தின் கீழ் அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலன்புரி நிலைய மாணவர்களுக்கு வழங்கவென பாதுகாப்பான குப்பி விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

கொமர்சல் வங்கியின் வவுனியா கிளை முகாமையாளர் ஆர் சிவஞானம் இக்குப்பி விளக்குகளை பாடசாலை ஆசிரியர் ஆ.சுபாஸ்கரனிடம். கையளித்தார். இக்கையளிப்பு நிகழ்வு கொமர்சல் வங்கி வவுனியா கிளையில் இடம்பெற்றது. (10)

# கிடுகு வழங்கல்

(உடையார்கட்டு)

இராணுவத்தின் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து மீள சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத உடையார்கட்டு வடக்கைச் சேர்ந்த 65 குடும்பங்களிற்கான உதவிகள் யூ.என்.எச்.சி.ஆர், போரூட் நிதி உதவியுடன் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன அனுசரணையுடன் அண்மையில் வழங்கப்பட்டன.

இவ் உதவியானது வீடு மீள வேய்தலுக்காக 200 மட்டை கிடுகும், 3 கிலோ ஈர்க்கு , 10 பூட்டுத் தடி 20 வரிச்சுத்தடி என்பன 65 குடும்பங்களிற்கும் தனித்தனியாக வழங்கப்பட்டன.

## -கைதடி, நாவற்குழிப் பாலங்கள் புனரமைக்க-

# தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீதிகளைச் சீராக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை

**யாழ். கண்டிவீதியினில் கைதடி மற்றும் நாவற்குழிப் பிரதான பாலங்கள் திருத்தம்செய்து முடிக்கப்படும் வரை, பொதுமக்கள் சுமுகமான முறையில் போக்குவரத்தை மேற்கொள்ள ஏதுவாக, தற்காலிகப் பாதைகளை உடனடியாகச் சீர் செய்து வழங்குவதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.**

பாலங்களது திருத்த வேலைகளிற்காக தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள பாதைகள் போக்குவரத்திற்கு சுமுகமற்றிருப்பதாகவும், இதனால் தமது மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், பலதரப்புக்களாலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினது யாழ். அலுவலகத்தினது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அதிகாரிகள் குறித்த பாலப்பகுதிகளுக்கு நேரில் சென்று குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய்ந்திருந்தனர்.

இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளினது கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர். இதையடுத்தே தற்காலிக போக்குவரத்துப்பாதையினை பொது மக்கள் போக்குவரத்திற்கேற்ற வகையில் சீர்செய்து வழங்க சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள பாலங்கள் திருத்தப்படுகின்ற வேளையிலும், மக்கள் சுமுகமான முறையில் தமது போக்குவரத்துக்களை முன்னெடுக்கக் கூடியவகையில் உரிய மாற்றுப் பாதைகள் தீர்மானிக்கப்பட வேண்டுமென மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (27)

## இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் வருடாந்தம் நடத்தும் மாணவ ஆயவாளர் விருத்திப்போட்டி சம்பந்தமான கருத்தரங்கு ஒன்று இன்று காலை 10.30 மணியளவில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் இடம் பெற இருப்பதால் இதற்கு விண்ணப்பித்த மாணவர்களையும், பங்குபற்ற விரும்பும ஏனைய மாணவர்களையும் அவற்றிற்குப் பொறுப்பான ஆசிரியர்களையும் கலந்து கொள்ள வேண்டப்பட்டுள்ளது(36)



கிளிநொச்சி டிப்போச் சந்தியிலிருந்து இரத்தினபுரம் பகுதிக்குச் செல்லும் வீதியில் புதிதாக பாலம் அமைக்கப்பட்டு வரும் பகுதி கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தில் மூழ்கியுள்ளதையும், அப் பகுதியில் மக்கள் சிரமத்தின் மத்தியில் போக்கு வரத்தில் ஈடுபட்டிருப்பதையும் காண்க. பொருத்தமற்ற காலப் பகுதியிலேயே குறித்த பகுதியில் இந்தப் பாலம் அமைக்கும் வேலை கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம்: வரன்)

# பொம்மைவெளி, சூரியவெளி பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்கள் வெள்ளத்தால் பாதிப்பு

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொம்மைவெளி, சூரியவெளி பகுதியில் உள்ள சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினால் சூழப்பட்டு அவதியுறுகிறார்கள்.

இப்பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக பல குடிசை வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்துள்ளன. இதன் காரணமாக பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள உயர் அதிகாரிகள், உரிய இடத்தை பார்வையிட்டு வீதிக்குக் குறுக்காக குழாய் அமைத்து நீரை வெளியேற்றுவதற்கு வேண்டிய முன்முயற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதி மக்களுக்கு இலவச நிவாரணம் வழங்கப்படுவதினால் வேறு உதவிகள் எவையும் வழங்கப்படமாட்டாது என உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.



இலக்கத்தகடுகள் பொருத்தப்படாது பாவனைக்குட்படுத்தப்பட்டு வரும் வாகனங்களையிட்டு தமிழீழ காவல்துறை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வாகன உரிமையாளர்களை சட்ட நடவடிக்கைக்குட்படுத்துவதுடன் குற்றப்பணம் அறவிட்டும் வருகின்றனர். நேற்றையதினம் கிளிநொசசி நகர்ப்பகுதியில் மேற்படி நடவடிக்கையினை தமிழீழ காவல்துறை குற்றத்தடுப்புப் பிரிவினர் மேற்கொள்வதனைப் படத்தில் காணலாம். (படம் சோதி)

# அதிகரித்த ஒய்வூதியக் கொடுப்பனவு கிடைக்கவில்லை

( நமது நிருபர்)

வடமராட்சியில் உள்ள ஓய்வூதியர் களுக்கு இதுவரை அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையென ஓய்வூதியர்கள் கவலையடைந்துள்ளனர்.

பருத்தித்துறை, கரவெட்டிப் பிரதேச செயலகங்களின் ஊடாக ஓய்வூதியம்பெறும் ஓய்வூதியர்களுக்கே இன்னமும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்கள் இக்கொடுப்பனவுகள் இந்த மாதம் வரும் என ஒவ்வொரு மாதமும் எதிர்பார்த்து ஏமாற்றமடைவதாகத் தெரிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் உட[illegible]டிக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் இவர்கள் மேலும் வேண்டு[illegible]கை விடுத்துள்ளனர். (45)

# சுகாதாரத்தைப் பேணி வரு[illegible]ன் காக்க பொது சுகாதார பரிசோதகர் வே[illegible]ண்டுகை

(தென்மராட்சி)

கொடிகாமம் பிரதேசத்தில் தொற்றுநோய்கள் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகப் பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

கொடிகாமம் பிரதேசத்தில் தொற்றுநோய் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் மற்றும், கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக கொடிகாமம் பிரதேசப் பொது சுகாதார பரிசோதகர் நிர்மலானந்தன் தெரிவிக்கிறார்.

மற்றும் இப்பிரதேசத்தில் உள்ள உணவகங்களில் சுகாதாரம் முழுஅளவில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த காலங்களில் இப்பிரதேசத்தில் தொற்றுநோய்கள் வேகமாகப் பரவிய போதும் இன்று அந்தநிலமை இல்லை என்றும், மழை காலமாக உள்ளதால் நோய்த்தாக்கத்தில் இருந்து பாதுகாக்கப் பொதுமக்கள் குடிநீரைக் கொதிக்கவைத்துப் பயன்படுத்த வேண்டும் எனவும் நீங்கள் வீடுக[illegible] அருகில் மழைநீர், கழிவுநீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பொதுமக்கள் சுகாதாரத்தைப் பேணுவதுடன் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்று வருமுன் நோய்களைத் தடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (28)

# பொது நோக்கு மண்டபம் திறப்பு

(வடமராட்சி)

நியாப் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் கப்புதூ அந்தணத்திடல் பகுதியினில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பொது நோக்கு மண்டபம் எதிர்வரும் திங்கட்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

திறப்பு விழா நிகழ்வில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், நியாப் திட்ட யாழ்..அலுவலக பணிப்பாளர் என்.பாலகிருஷ்ணன், மற்றும் விடுதலைப்புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்இ.தயா, கரவெட்டி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (27)

# வலி. வடக்கில் மீள் குடியமர்ந்த மக்களுக்கும் வீட்டுத்திட்டத்தில் பயன் கிடைக்குமா?

## - வலி.வடக்கு பொது அமைப்புக்கள் கேள்வி

(நல்லூர்)

உலக வங்கியினால் யாழ். குடாநாட்டில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டத்தில் வலி வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியேறிய மக்களுக்கும் வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைஎடுப்பார்களா?என பொதுமக்களும் வலி.வடக்கிலுள்ள பொதுஅமைப்புக்களும் கேள்வி எழுப்புகின்றன.

சுமார் 15 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து பல்வேறு துன்ப துயரங்களை வலி வடக்கு மக்கள் அனுபவித்து வருகின்றமை சர்வ உலகமும் அறிந்த விடயம் ஆகும்.

இந் நிலமையில் முன் மாதிரியாக உலக வங்கியினால் யாழ்.குடாநாட்டில் கட்டப்பட்ட 100 வீடுகளில் ஒரு வீடு கூட வலி வடக்கில் கட்டப்படவில்லை.

2000 ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்த யாழ்.செயலக உயர் அதிகாரிகளைக் கொண்ட பிரதேசங்களில் இவ் வீட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளதாக வலி வடக்குப் பகுதி பொதுஅமைப்புக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

அடுத்த ஆண்டு யாழ்.குடாநாட்டில் 1000 இற்கு மேற்பட்ட வீடுகள் உலக வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப் படவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் அடுத்த ஆண்டிலேனும் வலி.வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பயன் கிடைக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்களும் பொது அமைப்புக்களும் வேண்டி நிற்கின்றன. (41)



உடையார்கட்டு வடக்குப் பகுதியில் இடம்பெயர்ந்து மீள் திரும்ப முடியாத 65 குடும்பங்களிற்கான மீள வீடு வேய்தலுக்காக கிடுகுகள் அண்மையில் வழங்கப்பட்டன. (படம்:-சிவா)

# விரல் சூப்பும் குழந்தைகள் பற்றி

விரல் சூப்புதல் என்பது மனிதனின் முதல் ஒருங்கிணைந்த தசை இயக்கம் ஆகும். இது அனைத்துக் குழந்தைகளுக்குமே பொதுவான விடயம் தான். அதுபோல வாய் வழியாக சுவாசிப்பது உதடு மற்றும் நகம் கடிப்பது உள்ளிட்ட சில பழக்க வழக்கங்கள் காணப்படும். பெரும்பாலான குழந்தைகள் 4 வயதுவரை விரல் சூப்பும், அதன் பிறகு தானாக விட்டுவிடும். ஆனால் சில குழந்தைகள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருப்பார்கள். அதாவது 4வயதுக்கும் மேல் அவர்கள் விரல் சூப்பிக்கொண்டே இருப்பார்கள்.

குழந்தைகள் விரல் சூப்புவது உணர்வு சம்பந்தமான விடயம் குழந்தைகளுக்கு முதல் உலகம் தாய் தான். அப்படிப்பட்ட தாயின் அருகாமை குழந்தைகளுக்கு அவசியம் தேவை. இந்த அருகாமை ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கிடைக்காமல் போனாலும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு பயம் வந்துவிடும். அதனால் அதிலிருந்து தப்பிக்க குழந்தைகள் கண்டுபிடிக்கும் ஒன்றுமில்லாத ஒரு பழக்கம்தான் விரல் சூப்புதல். அதாவது விரல் சூப்புவதன் மூலம் மன அழுத்தத்தில் இருந்து விடுதலை கிடைக்கும் என்று குழந்தைகள் நம்புகின்றன. மேலும் சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் அவர்களின் பாதுகாப்பு எப்போதெல்லாம் கேள்விக்குறியாகிறதோ, அப்போதெல்லாம் விரல் சூப்புகிறார்கள்.

விரல்சூப்புவது 4வயதுக் மேல் நீடிக்கும் பட்சத்தில் குழந்தைகளின் பல் வரிசை, முக அமைப்பு மற்றும் உதடு அமைப்புக் கடுமையாகப் பாதிக்கப்படும். பற்கள் உயர்ந்து ஒழுங்கற்ற முகம் உண்டாகும். மேல்தாடை உருவில் மாற்றம் ஏற்படும். பற்களின் வளர்ச்சியும் சீராக இருக்காது. தெற்றுப்பல் உள்ளிட்ட ஒழுங்கற்ற பல்பிரச்சினை ஏற்படும். பல்குழிகளைச் சுற்றிலும் உள்ள மென்மையான திசுக்களும் பாதிக்கப்படுகின்றன. இதுபோல உதடு மற்றும் நாக்கிலும் பாதிப்புகள் உண்டாகும்.

இதுபோல கைவிரலில் வழக்கத்திற்கு மாறான வளர்ச்சி, பேச்சுக் குறைபாடுகள் போன்ற பிரச்சினைகளும் ஏற்படலாம். விரல்சூப்பும் பழக்கத்திற்கும் வாய் வழி சுவாசம், தொண்டை நோய், நடுக்காதில் தொற்று, டான்சில் போன்ற பிரச்சினைகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பதால் விரல்சூப்பும் குழந்தைகளுக்கு இவற்றில் ஏதாவது சில பிரச்சினைகளோ அல்லது அத்தனையுமோ இருக்கக்கூடும்.

சரி விரல் சூப்பும் பழக்கத்திற்கு எப்படி சிகிச்சையளிக்கலாம்?

விரல் சூப்பும் பழக்கத்தை நிறுத்துவதில் பெற்றோருக்கு முக்கிய பங்கு உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் பெற்றோர்கள் குழந்தைகளுடன் அதிகப்படியான நேரத்தைச் செலவிட வேண்டும். குறிப்பாக குழந்தைகளுக்குப் பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும் அளவுக்கு வைக்கக்கூடாது.

# கண்ணாடிக் கூண்டில் 6000 தேள்களுடன்

## 39 நாள் வாழ்ந்த மலேசியப் பெண்

கண்ணாடிக் கூண்டில் 6 ஆயிரத்து 69 தேள்களுடன் 36 நாட்கள் வாழ்ந்து மலேசியப் பெண் நூர் மாலெனா சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன் தாய்லாந்து நாட்டுப்பெண்மணி காஞ்சனா கெட்கியூ 3ஆயிரம் தேள்களுடன் 32 நாட்களைக் கழித்தார். அவர் 9முறை தேள்களால் கொட்டப்பட்டார். மிக நீளமான தேள்களை மேற்கு ஆபிரிக்காவிலும் அடுத்து தென்னியந்தியாவிலும் காணலாம். தலையிலிருந்து கொடுக்கு நுனி வரை 07 அங்குலத்திற்கு மேல் உள்ள தேள்களே இங்கு அதிகமாகவுள்ளன. தேளின் கொடுக்கில் சிறிதளவு விஸ்கியை விட்டால் தேளின் விஷம் வீரியம் இழப்பதுடன் தேளும் உடனே இறந்துவிடும் என ஆய்வுகள் கூறுகின்றன.

## கரும்பின் அறிமுகம்

முதன் முதலில் கரும்பினை அறிமுகம் செய்தது யார் தெரியுமா? கடைஏழு வள்ளல்களுள் ஒருவரான ஔவைக்கு நெல்லிக்கனி கொடுத்த வள்ளல் அதியமான் தான் தற்பொழுது தருமபுரி என்றழைக்கப்படும் தகடூரிற் காட்டுப் பயிராக இருந்த கரும்பினை பயிர் செய்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார். இங்கே அறிமுகமாகிய கரும்பினை இப்பொழுது உலகின் எல்லா நாடுகளிலும் தெரிந்து வைத்துள்ளனர். இதை ஐரோப்பாவுக்கு அறிமுகப்படுத்தியது பாரதத்தை வெற்றி கொண்டு, ஐரோப்பா திரும்பிய அலெக்சாண்டர் தன்னுடன் கரும்பை எடுத்துச் சென்று கீழைநாட்டின் இனிப்பு கரும்பு என்றான்.

## பாதரசம்

உலோகம் என்றால் அது உறுதியானது. ஆனால் தண்ணீர் போன்று திரவமாகவும் ஒருவகை உலோகம் இருக்கிறது. அதுதான் பாதரசம் இது கண்ணாடியில் ஒட்டிக்கொள்ளாது உருண்டு கொண்டே வரும். குறைந்த வெப்பத்தாலும் பாதிப்படையும்.

எனவே தான் பாதரசத்தை வெப்பமானி, காற்றின் அழுத்தம், ஈரப்பதத்தைக் கண்டுபிடிக்க உதவும் கருவிகளிலும் மருந்துப் பொருட்கள் தயாரிப்பதிலும் பயன்படுத்துகிறார்கள்.



யப்பானின் பிரபல்யமான இலத்திரனியல் நிறுவனமான கிற்ராச்சி PDA யின் பிரதிநகல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இது நேரடிமெதனோல் எரிபொருள்கலம் மூலம் சக்தியூட்டப்படுகிறது.

### மொழிகள் 9000

உலகில் 600கோடி மக்கள் 9000 மொழிகளைப் பேசுகின்றனர். இதில் 12 மொழிகளே அதிகமான மக்களால் பேசப்படுகின்றது.

# கறுப்பு எருமை ஈன்ற வெள்ளை நிறக்கன்று

அமெரிக்காவின் விஸ் கான்சின் மாகாணம், ஜேன்ஸ் வில்லே நகரில் மிகப்பெரிய காட்டெருமைப் பண்ணை உள்ளது. இங்கு கறுப்பின காட்டெருமை மட்டும் வளர்க்கப்படுகின்றன. இந்த பண்ணையில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஒரு கறுப்பின காட்டெருமை வெள்ளை நிற கன்றை ஈன்றது. இது ஒரு உயிரியல் அதிசயம் என்று கால்நடை மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# "டவுடாடிஸ்" எரிகல் பூமியுடன் மோதுமா?

பூமி உள்ளிட்ட பிற கிரகங்களைப் போலவே 'டவுடாடிஸ்' எரிகல்லும் சூரியனைச் சுற்றி வருகிறது. இது சூரியனை ஒருமுறை சுற்றிவர 4 ஆண்டுகள் ஆகின்றன. பூமி ஒரு குறிப்பிட்ட அச்சில் சூரியனைச்சுற்றிச் சுழல்கிறது. ஆனால் 'டவுடாடிஸ்' போன்ற எரிகல் குறிப்பிட்ட அச்சில் சுழலுவதில்லை. அவ்வப்போது தாறுமாறாகச் சுழலும் இந்த 'டவுடாடிஸ்' எரிகல் கடந்த 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பூமிக்கு அருகே 40இலட்சம் கிலோ மீட்டர் தொலைவில் வந்தது. அதன்பிறகு இப்போது மீண்டும் பூமியின் சுற்றுப்பாதையைக் கடந்து செல்கிறது.

அதாவது, பூமிக்கும், சந்திரனுக்கும் இடையேயுள்ள தூரத்தைப் போல 4 மடங்கு தூரத்தில் வருகிறது. இதை வானியல் நிபுணர்கள் மிகக் குறைந்த தூரம் என்று கருதுகிறார்கள். இதனால் பூமிக்கு ஆபத்து ஏற்படுமோ? என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஆனால், அமெரிக்காவின் 'நாசா' விஞ்ஞானிகள் இந்த 'டவுடாடிஸ்' எரிகல் பூமியின் மீது வந்து மோதுவதற்கான வாய்ப்பே இல்லை என்று அடித்துக் கூறுகிறார்கள்.

# குறைப்பிரசவத்தில் பிறக்கும் ஆண் குழந்தைகளுக்கே கூடிய பாதிப்பு

குறைப்பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளில் குறிப்பாக ஆண் குழந்தைகளுக்கு மூளை பாதிப்புக் காரணமாக பல்வேறு சிக்கல்கள் உண்டாகும். அவர்களின் வளர்ந்த வயதிலும் கூட இத்தகைய பாதிப்புக்கள் தொடரவாய்ப்பு உள்ளது.

பெரும்பாலும் குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு சாதாரண குழந்தைகளைக் காட்டிலும் மூளை சிறியதாகக் காணப்படும். எடைகுறைவு என்பது குறைப்பிரசவத்தைப் பொறுத்தவரை முக்கியமான சிக்கல் ஆகும். இந்தக்குழந்தைகளுக்கு சிறிய மூளையே அமைகின்றன. சிக்கலான இயக்கங்களைக் கையாளக்கூடிய குறிப்பிட்ட பகுதியின் வளர்ச்சி கடுமையாகப் பாதிக்கப்பட்டு சுருங்கி விடுகிறது.

இதனால் இத்தகைய குழந்தைகள் வளர்ந்த நிலையில் சரியாக பேசமுடியாமல் தவிப்பார்கள். சிக்கலான சூழ்நிலைகளில் சமுதாயத்தை எதிர்கொள்ள முடியாமல் நெருக்கடியில் சிக்கித் திணறுவார்கள். இதில் பெண் குழந்தைகளைக் காட்டிலும் ஆண்குழந்தைகள் தான் அதிக அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்களாம்.



யப்பானிய இரண்டாவது பெரிய நிறுவனமான ஏயாக்கரியரும் சொனி நிறுவனமும் இணைந்து NTTDOCOMO கையடக்கத் தொலைபேசியைத் தயாரித்துள்ளன. புதிய தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட இத்தொலைபேசி பரீட்சார்த்தமாக விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.


# விஞ்ஞானிகளின் மரபணு மாற்ற முயற்சி

எலிகளின் முதிர்ச்சியடையூாத விந்தணுக் கலங்களைக் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவற்றை ஆய்வுகூடங்களில் வளர்ச்சியடையச் செய்து எலிகளின் இனப்பெருக்கத்திற்குப் பயன்படுத்தியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். முதிர்ச்சியடையாத விந்தணுக்கலங்கள் விந்தணுக்களாக வளர்ச்சியடையக் கூடியவை. இந்த விஞ்ஞான ரீதியான கண்டுபிடிப்பு விலங்குகள் மீதான மரபணு மாற்றங்களை மேற்கொள்வதற்கு இலகுவான வழிகளைக் காண்பிக்கக்கூடும் என்பது விஞ்ஞானிகளின் கருத்தாகும். இத்தொழில் நுட்பத்தை இலகுவாக மனித குலத்திற்கும் மாற்ற முடியுமென சிறுவர் சுகாதாரம் மனித அபிவிருத்தி தொடர்பான அமெரிக்காவின் தேசிய நிறுவனம் கூறுகிறது.

# கையடக்கத் தொலைபேசியில் மிருகங்கள் பறவைகளின் ஒலிகள்

மிகவிரைவில் உங்களுடைய கையடக்கத் தொலைபேசிகள் ஒரு சிங்கம் போன்று உறுமும் அல்லது தானியக்களஞ்சிய ஆந்தை போல அலறும், பிரித்தானிய காட்டு விலங்குகளின்



ஒலிப்பதிவுகளிலிருந்து இவ்வொலிக்குறிப்புக்கள் பெறப்பட்டு கையடக்கத் தொலைபேசிகளின் ஒலிச் சமிக்கைகளாக மாற்றப்படவுள்ளது.

இதற்காக இந்நூலகத்திற் பதிவாகப் பேணப்படும் சுமார் 100,000 ஒலிக்குறிப்புகளிலிருந்து நீர்யானை, பாம்புகளின் ஒலிக்குறிப்புகள் உட்பட 40 ஒலிக்குறிப்புகள் பெறப்பட்டுள்ளன. ஏனையவை பின்னர் சேர்க்கப்படும் எனப் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (பி.பி.சி) அறிவித்துள்ளது.

கூடுதலான மிருகங்களின் ஒலிகள் பறவைகளின் பாட்டுக்கள் அதாவது குயில்கள், அமேசன் காடுகளில் வாழும் கிளிகள், கறுப்புப்பறவைகள் என்பன அடங்கும். அத்துடன் குரங்குகளின் கத்தல், பன்றியின் உறுமல் என்பனவும் இதில் உள்ளடங்கியுள்ளன.

# அரசு கேட்டதற்கிணங்கவே அமைச்சுப் பதவி ஏற்றோம்

## ஜே.வி.பி.க்கு ரிசாத்பதியுதீன் தெரிவிப்பு

அமைச்சுப் பதவிகளைத் தாம் வலிந்து பெறவில்லையெனவும், மாறாக சமாதான நடவடிக்கைகளுக்குத் தமது ஆதரவை வழங்குகின்ற காரணத்தால் அரசு கேட்டுக் கொண்டமைக்கு இணங்கவே அமைச்சுப்பதவிகளைப் பெற்றுக்கொண்டதாக வன்னி மாவட்டப் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தியமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்றவர்களுக்கு சனாதிபதி அமைச்சர் பதவிகளை வழங்கியமைக்கு கடும் எதிர்ப்பைத் தெரிவிப்பதாக ஜே.வி.பி நேற்று முன்தினம் தெரிவித்தது. இதற்குப் பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# சம்பளம் 5000 ரூபாவால் உயர்த்தாவிடின் பாரிய தொழிற் சங்கப் போராட்டம்

## அரச, தனியார் ஊழியர் அரசுக்கு எச்சரிக்கை

எதிர்வரும் வரவு-செலவு திட்டத்தில் அரசாங்கம் மற்றும் தனியார் ஊழியர்களின் சம்பள உயர்வு அதிகரிக்கப்பட வேண்டுமெனகோரி கடந்த புதன்கிழமை கொழும்பில்ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதில் 4000 இற்கும் மேற்பட்ட அரச மற்றும் தனியார் துறை ஊழியர்கள் பங்கு கொண்டனர். அரசவேலை சம்பள உயர்வு தொடர்பான குழுவின் அமைப்பாளரான சம்பத்ராயித தெரிவிக்கையில்;

வாழ்க்கைச் செலவிற்கு ஏற்ப அரச ஊழியர்களுக்கும் தனியார் ஊழியர்களுக்கும், சம்பளங்கள் சுமார் 5000 ரூபாவினால் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டதாகவும் நூற்றுக்கு இருபது வீத சம்பள அதிகரிப்பை மேற்கொள்ளலாம் என தெரிவித்து பதவிக்கு வந்த இந்தஅரசாங்கம் தற்போது வரவு-செலவு திட்டத்தில் அதற்கான வாய்ப்புகள் இல்லையென்று கூறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இப்போராட்டம் நடநததாக தெரிவித்துள்ள அவர், சம்பள உயர்வு வழங்கப்படாது விட்டால் தமது குழு பாரிய எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்குமென எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

# இம் மாதம் சம்பளத்தை 10 ஆம் திகதிக்கு முன் வழங்குக

## -சனாதிபதியிடம் கோரிக்கை

இந்து முஸ்லிம் மக்களது பெருநாள் தினங்களை முன்னிட்டு அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு இந்த மாத சம்பளத்தை எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு சிறிலங்கா முஸ்லிம் சமாதான நீதவான்களின் பேரவை சனாதிபதியிடம் கேட்டுள்ளது.

இந்து மக்கள் இம் மாதம் 11 ஆம் திகதி தீபர்வளிப்பண்டிகையை கொண்டாடுகின்றனர். முஸ்லிம்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி நேன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்றனர் இந்த நிலையிலேயே அரச தனியார் துறையினருக்கான சம்பளங்கள் எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

(32)

# எதிர்க்கட்சியினர் மீதான பழிவாங்கல்களை நிறுத்த எஸ்.பி சனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

**எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அரசியல் பழிவாங்கல் களை உடனடியாக நிறுத்த வேண்டுமென ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் கருத்துத் தெரிவிக்கையில்:

சமுர்த்தி நிதியை மோசடி செய்தமை குறித்து என்னை இன்று அல்லது நாளை கைது செய்யப்போவதாக கூறுகிறார்கள். தற்போது புதிதாக எதிர்வரும் 09.10ஆம் திகதி என்னை ஊழல் மற்றும் மோசடி ஆணைக்குழுவினர் கைதுசெய்து வழக்குப்பதிவு செய்வார்களென கூறுகிறார்கள்.இவ்வரசியல் பழிவாங்கல்களை விரைவில் முடிவிற்குக் கொண்டு வருவீர்களென அரசிற்கும் சனாதிபதிக்கும் கூறு விரும்புகிறேன் என்றார்.

# மன்.மாவட்ட சமூக அபிவிருத்தித்திட்ட ஒப்பந்தம் கைச்சாத்து

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நிகொட் நிறுவனத்தின் சமூகஅபிவிருத்தித் திட்டத்திற்கான ஒப்பந்தம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் கடந்த புதன்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் மாந்தைமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட விடத்தற்தீவு, ஆண்டான்குளம் ஆகிய இரண்டு கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ்த் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தினைச் செயற்படுத்தும் பங்காளி நிறுவனமாக தமிழர்புனர்வாழ்வுக்கழகம் தெரிவு செய்யப்பட்டது. அதற்கான ஒப்பந்தத்தில் மன்னார் மாவட்ட அரச அதிபர் விசுவலிங்கம் அவர்களும் மன்னார் மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் அ.கேசவனும் கைச் சாத்திட்டனர்.

(மி)

# 36 ஆவது தடவையாக 2500 கோடி.ரூபாவை இலங்கைக்கு ஜப்பான் வழங்கும்

(கொழும்பு)

ஜப்பான் அரசாங்கம் 36 ஆவது தடவையாக இலங்கைக்கு அபிவிருத்தி தொடர்பான உதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

இதன்படி ஜப்பான் அரசாங்கம் 24 ஆயிரத்து 767 மில்லியன் ரூபாய்களை இலங்கைக்கு வழங்கவுள்ளது.

சர்வதேச ஒத்துழைப்புகளுக்கான ஜப்பானிய வங்கியின் நிர்வாகத்தின் கீழ் இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

இந்த உதவியின் கீழ் வடக்கு கிழக்குப் பகுதி உட்பட பல இடங்களில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இது தொடர்பில் கருத்துரைத்துள்ள ஜப்பானிய தூதுவர் அக்கியோசூடா, போர் நிறுத்த உடன்பாடு அமுலில் உள்ள அதே நேரம் சமாதானப் பேச்சுவார்த்தைகள் இன்னும் ஆரம்பமாகவில்லை என்ற விடயம் கவலைக்குரிய ஒன்றாகும் என தெரிவித்துள்ளார். சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே நாட்டின் அனைத்து பகுதிகளிலும் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். எனவே அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் உடனடியாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென அவர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

(32)

# பெரும்சிரமங்களை அனுபவிப்பதாக வாரிக்குட்டியூர் நலன்புரி நிலையமக்கள் புகார்

(செட்டிகுளம்)

வவுனியா-வாரிக்குட்டியூர் பகுதியில் அமைந்துள்ள நலன் புரிநிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் பெரும் சிரமங்களின் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த பெருமளவான குடும்பங்கள் இங்கு வாழ்ந்து வருகின்றன இங்கு தற்போது 90 குடும்பங்கள் வரை வாழ்ந்து வருகின்றன. தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக கொட்டில்கள் ஒழுகுவதாகவும் இதன் காரணத்தால் சிறுவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.நீண்ட காலமாக பல இன்னல்கள் மத்தியில் வாழ்ந்து வரும் எமது கஷ்ரத்தை நீக்க சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

இவர்களில் பெருமளவான மக்கள் இரணை இலுப்பங்குளம் கோவில் புதுக்குளம் குஞ்சுக்குளம் போன்ற உயர் பாதுகாப்பு வலயத்தைச் சேர்ந்த மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவு. மாவட்டத்தில் 40 குளங்கள் புனரமைப்பதற்கு உத்தேசம்

(வவுனியா செய்தியாளர்)

2005ஆம் ஆண்டு மேற்கொளப்படவுள்ள ஆயிரம் குளங்கள் புனரமைப்புத்திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் 40 சிறிய குளங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு உத்தேசிக் கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள கமநல கேந்திர நிலையங்கள் ரீதியாக புனரமைப்புச் செய்யப்படவுள்ள குளங்களின் எண்ணிக்கை வருமாறு கோயிற் குளம் கமநல கேந்திர நிலையப்பகுதியில் இரண்டு குளங்களும், செட்டிகுளம் கமநல கேந்திர நிலையப் பகுதியில் ஐந்து குளங்களும், உலுக்கி கமநல கேந்திர நிலையப்பகுதியில் ஒரு குளமும், பம்பைமடு கமநல கேந்திர நிலையப் பகுதியில் ஐந்து குளங்களும், ஓமந்தை கமநல கேந்திர நிலையப பகுதியில் பத்துக் குளங்களும், மடுக்கந்தை கமநல கேந்திர நிலையப் பகுதியில் இரண்டு குளங்களும், நெடுங்கேணி கமநல கேந்திர நிலையப் பகுதியில் பத்துக் குளங்களும் கனகராயன்குள கமநல கேந்திர நிலையப் பகுதியில் ஐந்து குளங்களும் புனரமைப்புச் செய்யப்பட தற்காலிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

(10)

# முன்பள்ளிக்கு அடிக்கல்

(செட்டிகுளம்)

வவுனியா சேமமடு படிவம் இரண்டுப் பகுதியில் மீள குடியமர்ந்து வரும் மக்களின் நன்மை கருதி வவுனியா தமிழர் புனர்வாழ்வுக்கழகம் டி.ஆர்.சி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இத்திட்டங்களின் ஒரு அங்கமாக முன்பள்ளிக்கான அடிகல் நாட்டும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் சேமமடு படிவம் இரண்டு பாடசாலை அதிபர் எஸ்.கநதவசேசன் அவர்களும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தா பி.சதாநந்தன் ஆகியோர் அடிக்கல்லை நாட்டிவைத்துள்ளனர். இந்த நிகழ்வில் பெருமளவான பெற்றோர்களும் சிறுவர்களும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(21)

# சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைக்கு செட்டிகுளத்தில் சேவையாளர் பற்றாக்குறை

## வைத்திய அதிகாரி தகவல்

(செட்டிகுளம்பு)

செட்டிகுளம் பகுதியில் வாழ்ந்து வரும் மக்களுக்கு சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் அளவுக்கு போதியளவான சேவையாளர்கள் இல்லை என்று செட்டிகுளம் சுகாதார வைத்திய அதிகாரி இலங்கசிங்க தெரிவிக்கின்றார்.

மாதம் ஒன்றுக்கு இப்பிரதேசத்தில் 23 குழந்தைகள் சராசரியாக பிறப்பதாகவும் இவற்றில் 3-5 வரையிலான குழந்தைகள் பாதுகாப்பற்ற முறையில் வீட்டிலேயே பிரசவம் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கிறார். இதன் காரணமாக பாரிய விளைவுகள் ஏற்படும் என்பதை அந்த மக்கள் உணராமல் இருப்பதாகவும் தமது பிரிவுக்கு குடும்ப நல உத்தியோகத்தர்கள் 6 பேர் தேவையாகஇருக்கின்ற போதும் தற்போது இருவர் மட்டுமே இருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இதன் காரணமாகவே அந்த மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியாமல் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(21)

# 1200 அரச ஊழியர் காணிபெற மனு

(செட்டிகுளம்)

வவுனியாவில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களுக்கு காணி கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதுவரை இவ்வாறு காணிகளைப் பெற்று கொள்வதற்காக 1200 அரச உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பத்தை கொடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக விண்ணப்பப்படிவங்கள் பரிசீலனையில் உள்ளது சில அரச அதிகாரிகளும், சொந்தமாக காணி கள் இருப்பவர்களும் தமது விண்ணப்பங்களை கொடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(21)

# அரசாங்கத்தின் செயல்குறித்து ஓய்வூதியர் சங்கம் அதிருப்தி

(கொழும்பு)

இந்த வரவு செலவுத் திட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோருக்கு சம்பள அதிகரிப்பை அரசாங்கம் மேற்கொள்ளாது என ஓய்வூதியர் சங்க செயலாளர் கூறியுள்ளார்.

அரசியல்வாதிகளைநம்ப முடியாது பதவிக்கு வரும்முன் ஒரு கொள்கையும் பதவிக்கு வந்த பின் இன்னொருகொள்கையையும் கடைப்பிடிப்பார்கள் உறுதிமொழிகள் எல்லாவற்றையும் காற்றில் பறக்கவிட்டு விடுகின்றனர் என அச்சங்கத்தின் செயலாளர் விதாபத்திரன கூறியுள்ளார்.

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA

## DIPLOMA COURSE IN PHYSICAL EDUCATION

## ACADEMIC YEAR-2004/2005

Applications are invited from qualified persons who wish to register for the above course in the university of Jaffna.

**Requlrements:**

1. Should have three passes in the G.C.E(A/L)
2. Eligibility to apply for university admission in sri Lanka and the selection will be made by a written examination and practical assessment conducted by the university. these examinations will be held only at university of Jaffna, thirunelvely.
3. Should pass an oral examination

   Note:- Prcference will be given to those candidates who have participaled in sports and athletics and won places at District and National level.
4. Should be in the age group 18-28 years.

   The university senate may relax the age requirement in the case of the candidates who are already in the sports profession in Government and non-Government sectors.

**Course fee:- Rs.15,000/= for tow years programme.**
**Duration :- Two years (Internal - full Time)**

Application forms and handouts could be obtained from the Assistant Registrar/ Exams & Admissions Branch, university of Jaffna on a payment of Rs.50/=. Duly filled application forms should be submitted to the "**Assistant Registrar/ Exams & Admissions Branch, University of Jaffna**" on or before 06.12.2004.
Those who have completed two years programme can follow a Third year programme leading to Advanced Diploma in Physical Education. Course fee Rs.15,000/=
(**Note:**- Those who have applied For the above course and sat the admission Test wrritten held on 23.10.2004 at the university of Jaffna need not to apply again)

(சி-10602)

Vice Chancellor.

–பன்முகப்படுத்தப்பட்ட வரவு–செலவுத்திட்டத்தின் கீழ்

# கிளி.மாவட்ட விவசாயத் திணைக்களத்திற்கு இரண்டரை இலட்சம் ரூபா ஒதுக்கீடு

(விசுவமடு)

இவ்வாண்டு கிளிநொச்சி மாவட்டத்திற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் அரச திணைக்களங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி மாவட்ட விவசாயத்திணைக்களத் (விரிவாக்கம்)திற்கு 2இலட்சத்து 50ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டதாக அரச திணைக்களப் புள்ளி விபரப்பதிவு தெரிவிக்கின்றது. இதில் விவசாயத்திணைக்கள வேலைத்திட்டத்திற்கு 1இலட்சத்து 50ஆயிரம் ரூபாநிதியும் வீட்டுத்தோட்டப்போட்டி நடாத்துவதற்காக 1இலட்சம் ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு பனை அபிவிருத்திச் சபையினருக்கு பனை நடுகைத்திட்டத்திற்கென 60ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (10)

# அறிவித்தல்

## உப்பு உற்பத்தி பேட்டை ஆனையிறவு

**எமது நிறுவன உற்பத்திகளின் ஆகக் கூடிய சில்லறை விலைகள் 15.10.2004 முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.**

01 கிலோ பொதி அயடீன் கலந்த கல் உப்பு ரூபா. 18/=

400 கிராம் பொதி அயடீன் கலந்த மேசை உப்பு ரூபா. 15/=

பணிப்பாளர்,
உப்பு உற்பத்தி பேட்டை,
ஆனையிறவு.

(சி-10299)

# கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் வட்டக்கச்சி (வ/து) கிளைக்குழுத் தேர்தல் - 2004

# அறிவித்தல்

**வடக்கு கிழக்கு மாகாணக்கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடக்கு கிழக்கு) அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் 1998.05.19ஆம் திகதி 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடகிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக ஒழுங்குகள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**காலம்:- 2004.11.20.ஆம் திகதி சனிக்கிழமை**
**நேரம் :- மு.ப.9.30 மணி**

| தொ.இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 01. | வட்டக்கச்சி மத்தி | தலைமைக்காரியாலய மண்டபம், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் வட்டக்கச்சி |
| 02. | 02. | வட்டக்கச்சி மேற்கு | வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பாடசாலை மண்டபம். |
| 03. | 03. | வட்டக்கச்சி கிழக்கு | பிரபா முன்பள்ளி, ஆறுமுகம் வீதி,வட்டக்கச்சி. |
| 04. | 04. | மாயவனூர்க் கிளை | மாயவனூர் பாடசாலை. |
| 05. | 05. | மாவடியம்மன் கிளை | அறிவொளி சனசமூக நிலைய மண்டபம். |
| 06. | 06. | இராமநாதபுரம் மத்தி | இராமநாதபுரம் மகாவித்தியாலயம். |
| 07. | 07. | இராமநாதபுரம் தெற்கு | இராமநாதபுரம் சங்க அரிசியாலைக்கட்டடம். |
| 08. | 08. | இராமநாதபுரம் கிழக்கு | கிளைக்கட்டடம், இராமநாதபுரம் கிழக்குக்கிளை கிளைக்கட்டடம். |

முக்கியகுறிப்புக்கள்:-

01. வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த அறிவித்தலை சொந்த அறிவித்தலாகத் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

02. இது சம்பந்தமான மேலதிக தகவல்களை கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

பொதுச் செயலாளர்,
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்.
வட்டக்கச்சி.

(சி-10601)

# வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (நியாப்)-II
## கிளிநொச்சி மாவட்டம்

# மையக்கிராமத் தெரிவிற்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி மாவட்டத்தில் நியாப்-IIதிட்டத்தின் கீழ் மையக் கிராமங்களின் தெரிவு உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட மையக்கிராமங்களில் நியாப் -II திட்ட நடவடிக்கைகள் (சனவரி) தைமாதத்திலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

எனவே பொது அமைப்புக்கள் (கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், கமக்காரர் அமைப்பு) மூலமாக மையக்கிராமத் தெரிவுகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் அனுப்ப முதல் தங்கள் பிரதேச சமூக நலன்விரும்பிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துரையுடன் விண்ணப்பிக்கவும்.

கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் விண்ணப்பங்களைத் தயார் செய்து குறிப்பிட்ட மையக்கிராமங்களின், கிராமசேவை உத்தியோகத்தர் மூலமாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலர்களிடம் அவைகள் உடனடியாக கையளிக்கப்படல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பிரதேச விவசாயக் குழுக்கூட்டத்தில் பிரதேச செயலர்களை தலைவராகக்கொண்ட குழுவால் சீராக பரிசீலனை செய்யப்பட்டு, திட்டத் தெரிவு நடைமுறைகளுக்கிணங்க தெரிவுசெய்யப்பட்டு பிரதேச செயலர்கள் வாயிலாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, மாவட்ட புள்ளியிடல் மேற்கொள்ளப்பட்டு மாவட்ட தெரிவுக் குழுவிற்கு அனுப்பப்பட்டு இறுதித்தெரிவு மாவட்ட அரசாங்க அதிபராகிய எனது தலைமையின்கீழ் மாவட்டத் தெரிவுக்குழுவால் இறுதியாக்கப்படும். விபரங்களை 10.11.2004க்கு முன்னர் பொது அமைப்புக்கள் கிராமஉத்தியோகத்தர்களிடம் கையளிக்க வேண்டும்.

தி.இராசநாயகம்,
அரச அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

## மாதிரி விண்ணப்பப் படிவம் நியாப்-II கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்ட .......................... மையக்கிராமத்தின் பொது அமைப்புக்களில் ஒன்றான.................................. இன் நிர்வாக உறுப்பினர்களாகிய நாம் நியாப்-II திட்டத்தின் மூலம் பெறும் மையக்கிராமத்தின் அபிவிருத்திக்காக நிதியினைப் பெறுவதற்கு இத்தால் விண்ணப்பிக்கின்றோம்.

எமது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு நியாப்-IIஎமக்கு நிதியுதவி வழங்கும் பட்சத்தில் அத்திட்டத்தினை கீழ்வரும் நிபந்தனைகளுடன் ஏற்பதாக உறுதியுரை வழங்குகின்றோம்.

01.திட்டத்தினால் அனுமதிக்கப்படும் நன்மைகள், கிராமத்தில்வசிக்கின்ற தேவைப்படும் குடும்பங்களுக்குக் கிடைக்கச் செய்தல்.

02.திட்ட மூலதனத்தில் இம் மையக்கிராமத்திற்கான ஒதுக்கீட்டின் 7 லிருந்து 10 வீதமான வேலைகளைப் பயனாளிகள் பங்களிப்புச் செய்தல்.

03. திட்டத்தினால் ஏற்படுத்தித் தரப்படும் சொத்துக்களைத்தொடர்ந்து செயற்படுத்தி பராமரித்து வருதலை உறுதிப்படுத்தல்.

நியாப்-II திட்டத்திலிருந்து நிதி பெறுவதற்காக மக்களின் சம்மதத்தைப் பெறுவதற்குப் பொதுக்கூட்டம் ஒன்றுகூட்டி அதில் மேற்கூறிய நிபந்தனைகளுக்கமைவாக இத்திட்டத்தில் நிதிபெறுவதற்கு மக்களின் சம்மதத்தைப் பெற்று அவர்களின் கையொப்பங்கள் அடங்கிய கூட்டறிக்கையுடனும்,கிராம சேவை உத்தியோகத்தரின் உறுதிப்பாட்டுடனும் இணைத்துள்ளோம். இந்தக்கிராமத்தை நியாப்-II எடுத்து அபிவிருத்தி செய்யுமாறு கீழ் கையொப்பம் இடப்பட்ட மேற்படி பொது அமைப்பின் நிர்வாகசபையின் முக்கிய உறுப்பினர்களாகிய நாங்கள் இவ்விண்ணப்பம் மூலம் கோருகின்றோம்.

| | பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| 01 | ................................ | தலைவர் | ................................ |
| 02 | ................................ | செயலாளர் | ................................ |
| 03 | ................................ | பொருளாளர் | ................................ |

திகதி:..............................

சங்கத்தின் பதிவு இலக்கமும்,
இறப்பர் முத்திரையும்

## பொது அமைப்பால் பூரணப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய நியாப் IIமையக் கிராமத்தின் ஆரம்பத் தகவல் அறிக்கை

### 01. மையக்கிராமத்தின் விபரங்கள்

1.1) மையக் கிராமத்தின் பெயர்:..........................................
1.2) கிராமசேவகர் பிரிவு:-..........................................
1.3) பிரதேச செயலர் பிரிவு: ..................................
1.4) கமநல சேவை நிலையத்தின் பெயர்:-..........................
1.5) மையக் கிராமத்தில் குளமிருப்பின் அதன் பெயர்:-
..................................
1.6) குடும்பங்களின் எண்ணிக்கை:-..................................
1.7) உள்ளூரில் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:..................................
1.8) உள்ளூரில் இடம்பெயர்ந்து மீளவந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..............................
1.9) இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் வரவிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை:-..................
1.10) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கட்டுமானங்கள்:-
அ) வீதி இல்லை/ நடுத்தரம்/ முற்றாக
ஆ) பாடசாலை இல்லை/நடுத்தரம்/முற்றாக
இ) வீடுகள் இல்லை/நடுத்தரம்/முற்றாக
ஈ) ஏனைய கட்டுமானங்கள்
பெயர்
............................இல்லை/நடுத்தரம்/முற்றாக
............................இல்லை/நடுத்தரம்/முற்றாக

### 02. மையக் கிராம நிலப் பயன்பாடு

2.1) நிரந்தரமாக விவசாயம் செய்யப்படும் மேட்டுநிலம் (ஏக்கர்):-...............................
2.2) குளத்திலிருந்து நீர்ப்பாசனம் பெறும் நிலம் (ஏக்கர்):-..............................
2.3) பாவனையில் இல்லாத நிலம் (ஏக்கர்):-....................
2.4) பிறதேவைகளுக்கு (கட்ட்டம்,கிணறுகட்ட) பயன்படுத் தக்கூடிய காணியுள்ளதா? ஆம்/ இல்லை:-
2.5) வயற்காணி உள்ளவர்களின் எண்ணிக்கை:-
அ) கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..........................
ஆ) கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..........................
2.6) விவசாயக் காணி உள்ளவர்களின் எண்ணிக்கை:-
அ) கிராமத்திலுள்ள உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..........................
ஆ) கிராமத்திலில்லாத உரிமையாளர்களின் எண்ணிக்கை :-..........................
2.7) காணிஉரிமை எதுவுமில்லாதவர்களின் எண்ணிக்கை....
..........................

### 03.உட்கட்டுமான வசதிகள்

3.1) பாடசாலை உள்ளதா? ஆம் / இல்லை/ஆம் எனில் எண்ணிக்கையை குறிப்பிடவும்
3.2) பொதுக்கிணறு உள்ளதா? ஆம்/இல்லை- ஆம் எனின் எத்தனை:-.....................
3.3) பொதுமண்டபம் உள்ளதா? ஆம் / இல்லை
3.4) நீர்ப்பாசனக் குளம் உள்ளதா?ஆம் / இல்லை
3.5) சுகாதார நிலையம் உள்ளதா?ஆம் / இல்லை
3.6) பொதுச்சந்தை உள்ளதா?ஆம் / இல்லை
3.7) வீதிகளின் நிலைப்பாடு:-
நல்லநிலையிலுள்ளது/ இடைத்தர நிலையிலுள்ளது/மிகவும் மோசமானது/ புதிதாகப் போடப்படல் வேண்டும்.

### 04.கிராம அமைவிடம் (k.m)

4.1) மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலிருந்து தூரம்:-
4.2) பிரதேச செயலர் காரியாலயத்திலிருந்து தூரம்:-
4.3) கிராம அலுவலர் அலுவலகத்திலிருந்து தூரம்:-
4.4) கிட்டவுள்ள அரச வைத்திய நிலையத்திலிருந்து தூரம்:-
4.5) கிட்டவுள்ள அரச பாடசாலையிலிருந்து தூரம்:-
4.6) கிட்டவுள்ள த்பால் அலுவலகத்திலிருந்து தூரம்:-
4.7) அமைவிடத்தைக் காட்டும் வரைபடத்தை இணைக்குக.

### 05.கிராம மக்களின் பிரதான வருமானம்

5.1) மேட்டுப்பயிர்ச் செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-
5.2) நெற்பயிர்ச்செய்கையில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-
5.3) ஏனைய வருமானத்தில் தங்கியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 06.வறுமையின் தன்மை

6.1) நிரந்தர வருமானமற்ற குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.2) யுத்தப்பாதிப்புக்களினால் பெண்களின் தலைமையிலிருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.3) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற அங்கத்தவர்களை யுடைய குடும்பங்களின் எண்ணிக்கை:-
6.4) யுத்தப்பாதிப்புக்களினால் அநாதையாகவுள்ளவர்களின் எண்ணிக்கை:-
6.5) கிராமத்தில் காணியற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை:-
6.6) நிரந்தர வீடில்லாத குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 07.மிகவும் பிரயோசனமான கிராமத்திலுள்ள நீர்ப்பாசனத் திட்டத்தின் விபரங்கள் (இருப்பின் மட்டும்)

7.1) குளம்/ அணைக்கட்டு/ குட்டையின் பெயர்:-
7.2) அதற்குச்செல்லும் பாதையின் தன்மை:-
7.3) கிராமத்திலிருந்து அதன் தூரம்:-
7.4) அதன் தற்போதைய நிலைமை:-
1) இயங்குகின்றதா:- ஆம்/ இல்லை
2) உடைப்பெடுத்துள்ளதா:-ஆம்/ இல்லை
3) கூடிய புனரமைப்புச் செய்யப்படல் வேண்டுமா:- ஆம்/இல்லை
7.5) பயிர் செய்யப்படும் காணியின் அளவு:-
1) பெரும்போகம்:-............... 2) சிறுபோகம்:-..........................
7.6) கடந்த ஆண்டு பயிர்செய்திருப்பின் அதன்காணியின் அளவு:-
1) பெரும் போகம்:-................. 2) சிறுபோகம்:- ......................
7.7) 1. பயிர்ச்செய்கை நடவடிக்கையில் ஈடுபடும் குடும்ப எண்ணிக்கை:-.....................
2. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்திலிருந்து நீர்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-...............
3. பயிர்ச்செய்கை நடவடிக்கைக்கு இத்திட்டத்தை விடவேறு இடத்திலிருந்து நீர்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-
...............
4) காணியற்ற, ஆனால் இக் குளத்திலிருந்து நீர் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை:-

### 08.அபிவிருத்தித் திட்டங்கள்

8.1) இக் கிராமம் வேறு ஏதேனும் நிறுவனங்களுக்கூடாக தற்பொழுது அபிவிருத்தி செய்யப்படுகின்றதா?...............
8.2) 5 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள்:-

| நிறுவனம் | செயற்பாடுகள் |
|---|---|
| | |

8.3) திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கிராமிய பொது நிறுவனங்களுக்கு அனுபவம் உண்டா? ஆம்/ இல்லை
8.4) கொடுக்கப்பட்ட திட்ட நடவடிக்கை இலக்கை குறிப்பிட்ட நாளில் முடிக்க தடைகள் உண்டா? ஆம்/ இல்லை
8.5) நியாப் திட்டம் Iஇன்கீழ் அபிவிருத்திசெய்யப்பட்டதா? ஆம்/ இல்லை

### 09. வேறு தகவல்கள்

9.1) அழிவுகள் விஸ்தீரணம் (மொத்தமாக அல்லது குறைவாக):-
..........................
9.2) நெற்செய்கை மேற்கொண்ட விஸ்தீரணம்:-..........................
சென்ற சிறுபோகம்:-.............. சென்ற காலபோகம்:-..............
9.3) சென்றவருடம் செய்கை பண்ணாவிடில், எவ்வளவு காலம் செய்கை பண்ணப்படாமல் கைவிடப்பட்டது:-..........................
மாதம்:-.............................. வருடம்:-..............................
9.4) மையக்கிராமத்திலிருந்து குளம் எவ்வளவு தூரம்..........Km
9.5) மையக்கிராமத்திலிருந்து குளத்துக்குப் பாதை,பாதையின் வகை:-.............................. தூரம்:-..............................

### கிராம சேவையாளரது சிபார்சு

**எனக்குத் தெரிந்த வரையில் மேல்தரப்பட்ட தகவல்கள் யாவும் உண்மையானதும், சரியானதும் என சிபார்சு செய்கிறேன்.**
(ஏதாவது மாற்றங்கள் தவறுகள் இருப்பின் அதனைச் சுட்டிக்காட்டி அறிக்கை இணைத்தல் வேண்டும்)

கிராம உத்தியோகத்தர் ஒப்பம்:------------------------------------------------ திகதி:------------------------------
பிரிவு....................................................

(கிராம உத்தியோகத்தர் 15.11.2004க்கு முன்னர் உரிய பிரதேச செயலாளரிடம் கையளிக்க வேண்டும்.)

**இவ் விண்ணப்பங்களுக்கு நியாப் -II நடைமுறைகளுக்கிணங்க பரிசீலிக்கப்பட்டு இக்கிராமம் .......... இடத்தில் உள்ளது இக்கிராமம் எமது தெரிவுக்குழுவின் நிரற்படுத்தலின் போது ............ ஆம் இடத்தைப் பெற்றுள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறேன்.**

திகதி:- .................................... பிரதேச செயலகம்.................................. பிரதேச செயலாளர்:-..................................

(இவ்விண்ணப்பங்களை பிரதேச செயலாளர்கள் 19.11.2004க்கு முன்னதாக மாவட்ட செயலாளரிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்).

(சி.10294)

## இராணுவம், வீதி அபி.அ.சபைக்கெதிராக வவு.நீதிமன்றில் காணி உரிமையாளர் வழக்கு

(செட்டிகுளம்)

வவுனியா நொச்சிமோட்டை பகுதியில் இராணுவ முகாம் ஏ-9 சாலையை ஊடறுத்து அமைந்திருப்பதன் காரணமாக ஏ.9சாலையினை மறித்து தனியாருடைய காணிக்குள்ளால் வீதி அமைக்கப்பட்டு போக்குவரத்திற்கு அனுமதிவழங்கப்பட்டிருக்கின்றது. தற்போது காணியின் உரிமையாளர் இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராகவும் இராணுவத்தினருக்கு எதிராகவும் வவுனியா நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து இருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. (21)

## கால்நடைகளுக்கு தொற்றுநோய் உள்ளதாவென பரிசோதிக்குக!

### பண்ணையாளருக்கு பொருண்மியம் அறிவுறுத்து

துணுக்காய் பிரதேசங்களில் கால் நடைவளர்க்கும் பண்ணையாளர்கள் தங்கள் கால் நடைகளுக்கு அண்மைக்காலத்தில் ஏற்பட்ட கொடிய நோய்களான தொண்டையடைப்பான் கால் வாய்நோய் உள்ளதா என்பதை கால் நடை வைத்தியர் மூலம் பரிசீலனை செய்து கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

ஏனெனில், கட்டாக்காலி கால் நடைகள் யாவும் பண்ணையாளர்களின் கால்நடைகளும் சேர்ந்து உலாவுவதால் இந் நோய் பரவும் அபாய நிலை ஏற்படலாம் என துனுக்காய் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் கு.சசிக்குமார் தெரிவிக்கின்றார். (24)

## வீதியைக்கடக்க முற்பட்ட மாணவி விபத்தில் சிக்கி படுகாயம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் உள்ள றெட்பானா பகுதியில் கைஏஸ் வாகனம் மோதியதில் பாடசாலை சிறுமி ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, கடந்த புதன் கிழமை உடையார்கட்டில் பாடசாலை முடிந்து வீட்டுக்கு பேருந்து வண்டி மூலம் சென்று இறங்கி வாகனத்தின் பின்பக்கத்தால் வீதியைக் குறுக்கறுத்து ஓடும் போது, பரந்தனில் இருந்து புதுக்குடியிருப்பு நோக்கி வந்து கொண்டிருந்த கைஏஸ் வாகனம் மோதிக் கொண்டது. இதனால் 06 வயது உடையார்கட்டு ரதீஸ்கண்ணா நிறோஜினி என்பவர் படுகாயம் அடைந்துள்ளார். இவரை அங்கிருந்து புது/ வைத்தியசாலைக்கு எடுத்து சென்று மேலதிக சிகிச்சைக்காக வைத்திய சாலை நோயாளர் காவு வண்டி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை அன்றைய தினம் இரவு சுமார் 6.30 மணியளவில் புது/ மந்துவில் பகுதியில் துவிச்சக்கர வண்டி ஒன்று மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் காயம் அடைந்து புது/வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். (08)

## அரச கால் நடைவைத்திய அலுவலகத் திறப்பு விழா

(வவுனியா செய்தியாளர்)

செட்டிகுளத்தில் நிக்கொட் நிறுவனத்தால் புதிதாக நிர்மாணிக்கப்பட்டஅரச கால்நடை வைத்திய அலுவலகத் திறப்புவிழா இன்று காலை 11.00மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கால் நடைவைத்திய அலுவலகத்தினை வவுனியா மாவட்ட அரச அதிபர் க. கணேஷ் அவர்கள் திறந்து வைப்பார் இந்நிகழ்வில் நிகொட் நிறுவனத்தின் வவுனியா பிரதித்திட்டப்பணிப்பாளர் கிருபாசுதன், விடுதலைப்புலிகளின் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தி. ஞானவேல், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்படப்பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

## 40,000 மரக் கன்றுகளை நாட்ட பொருண்மிய மதியுரையகம் நடவடிக்கை

யு.என்.டி.பி. நிதியுதவியுடன் பொருண்மியமதியுரையகம் நடைமுறைப்படுத்தும் இம் மரநடுகைத் திட்டத்தில் 4 மாவட்டங்களில் 40.000 மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன. அத்துடன் மரநடுகையின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்து முகமாகவும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் ஒரு அங்கமாக கிளிநொச்சியிலுள்ள கலை பண்பாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் தேசிய மர நடுகை தினநிகழ்வு பொருண்மியமதியுரையகத்தின் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இதில் முதல் நிகழ்வாக பொது ஈகச்சுடர் பட்டினசபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் அவர்களால் ஏற்றி வைக்கப் பட்டது.

தேசியக் கொடியினை தமிழீழ அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி தமிழினி அவர்கள் ஏற்றிவைத்தார் அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து மங்கல விளக்கினை கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம், யு.என்.டி.பி. பிரதிநிதி காவா அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தலைவர் கணேசபிள்ளை, பனை தென்னை அபிவிருத்தி சபை இணைப்பாளர் மற்றும் சி.டபிள்யு.டி.ஆர். பணிப்பாளர் திருமதி கலைமகள் ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றி வைத்தார்கள்.

அடுத்து மரம் நாட்டும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வை கிளி மாவட்ட அரசாங்க அதிபர் ஆரம்பித்துவைத்தார். அதனைத் தொடர்ந்து காவா அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி கணேசபிள்ளை, சிரான் உதவிப் பணிப்பாளர் வன்னி தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் ஜெயசூரியா ஆகியோரினால் மரம் நாட்டப்பட்டது.

மேற்படி நிகழ்வு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு. மற்றும் மன்னார் மாவட்டங்களிலும் நடைபெற்றது. குறிப்பிடத்தக்கது.

---

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் – இலங்கை

## இராமநாதன் நுண்கலைக் கழகம்

## நுண்கலைமாணி (இசை/பண்ணிசை/நடனம்/சித்திரமும் வடிவமைப்பும்)

## கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2004/2005

மேற்படி பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியுடையவர்களிடமிருந்து 06.12.2004ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**கற்கைநெறிக்காலம்-நான்கு வருடங்கள்**

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்**

**01. நுண்கலைமாணி - இசை (வாய்பாட்டு)**
2004ஆம்ஆண்டு ஏப்பிரல் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு சித்தி பெற்ற பாடங்களில் **சங்கீதத்தையும்** ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**02. நுண்கலைமாணி -இசை(வயலின்)**
2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு சித்தி பெற்ற பாடங்களில் **சங்கீதத்தையும்** ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**03. நுண்கலைமாணி -இசை(வீணை)**
2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு சித்தி பெற்ற பாடங்களில் **சங்கீதத்தையும்** ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**04. நுண்கலைமாணி -இசை(மிருதங்கம்)**
2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற் அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு சித்தி பெற்ற பாடங்களில் **சங்கீதத்தையும்** ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**05. நுண்கலைமாணி -பண்ணிசை**
2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு சித்தி பெற்ற பாடங்களில் **சங்கீதம** ஒன்றாகவும் அத்துடன் **தமிழ் / இந்துநாகரிகம்/ இந்துசமயம்/ வரலாறு** ஆகியவற்றில் ஏதாவதொன்றில் சிறப்புச் சித்தி (B) பெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**06. நுண்கலைமாணி - நடனம் (பரதநாட்டியம்)**
2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளதோடு சித்தி பெற்ற பாடங்களில **பரதநாட்டியத்தையும்** ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியடையோராவர்.

*முக்கிய குறிப்பு*
மேற் குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்குரிய அனுமதிக்கான விண்ணப்பத்தாரிகள் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் ஆற்றுகைத் தேர்வுக்குத் தோற்றுதல் வேண்டும்..

**07. நுண்கலைமாணி - சித்திரமும் வடிவமைப்பும்**
2004 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதி பெற்றுள்ளமாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர் .

முக்கிய குறிப்பு
மேற்குறித்த கற்கை நெறிக்குரிய அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைகழகத்தால் நடத்தப்படும் செய்முறை அறிமுறை உள்ளடங்கிய தகுதிகாண் பரீட்சைக்குத் (Aptitudc Tcst) தோற்றுதல் வேண்டும் முதல் நிலையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**விண்ணப்பத்தாரிகள் கவனத்திற்கு:**

- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மேற்குறிப்பிடப்பட்ட கற்கைநெறிகளில் ஏதாவதொன்றுக்கு தெரிவு செய்யப்பட்டு பதிவினை மேற்கொண்ட மாணவரொருவர் இனிவரும் ஆண்டுகளிலான க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் (அதாவது 2004 ஆம் ஆண்டின் பின்னர்) பல்கலைக்கழக அனுமதிக்காக எக்காரணம் கொண்டும் விண்ணப்பிக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ளவும்.
- அனைத்து கற்கை நெறிகளுக்குரிய விண்ணப்பதாரிகளும் க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேற்றுப் பத்திரத்தினதும் Z score பத்திரத்தினதும் பொதுச் சாதாரண வினாத்தாளின் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பத்திரத்தினதும் போட்டோ பிரதியொன்றை விண்ணப்பத்துடன் தவறாது இணைத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் தமது விருப்பத்திற்குரிய கற்கை நெறிகளுக்கு முன்னுரிமையின் படி விண்ணப்பிக்கும் படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

மேற்குறித்த கல்வித்தகைமைகளுக்கு அமையாத பூரணப்படுத்தப்படாத மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் போட்டோப் பிரதிகள் இணைக்கப்படாத, தெளிவில்லாத விண்ணப்ப முடிவுத்திகதிக்குள் கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை யாழ்.பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்திலோ அல்லது யாழ்.பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள , மக்கள் வங்கி கிளையிலோ ரூபா. 150/= செலுத்திய பற்றுச்சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம்பெறவிரும்புவோா. நிதியாளர் யாழ்.பல்கலைக்கழகம் என்னும்பெயருக்கு ரூபா 150/= ஐ செலுத்திப் பெற்றுக்கொண்ட காசுக் கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுய விலாசம் இடப்பட்ட 23x10 செ.மீ அளவுள்ள கடித உறையை " கொழும்பு ஸ்ரோர்ஸ் / அலுவலகம், சென்றல் றோட், கொழும்பு 12" தொலைபேசி இலக்கம் 01-435620 முகவரிக்கு அல்லது உதவிப்பதிவாளர் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் அல்லது உதவிப்பதிவாளர் வவுனியா வளாகம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் 23x10 செ.மீ. அளவு கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கற்கை நெறியைக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்ப / ஒப்படைக்கவேண்டிய முகவரி**

**உதவிப்பதிவாளர்,**
**பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

**உபவேந்தர்**

(சி.10603)

# விமான நிலையங்களைச் சீரமைக்க பயணிகளுக்கு வரி விதிப்பு

(புதுடில்லி)

விமானநிலையங்களின் சீரமைப்பிற்கு பயணிகளிடம் தலா ரூபா 500வரி வசூலிக்க மத்திய அரசு ஆலோசித்து வருகிறது.

இந்த விமான நிலையங்களை விரிவாக்கம் செய்வது வசதிகளை அதிகரித்து, தரத்தை உயர்த்துவது ஆகிய பணிகளுக்காக பயணிகளிடம் கூடுதலாக வரி வசூலிக்க கடந்த ஆண்டு திட்டமிடப்பட்டது. இதற்காக இந்திய விமான நிலையங்களின் ஆணைய திருத்த பிரேரணை பாராளுமன்ற அறிமுகப்படுத்தப்பட்டது.

பெங்களூர் ஐதராபாத் மோபா (கோவா) நவி மும்பை, சகன் (புனே) கண்ணூர் (கேரளா) கான்பூர் ஆகிய விமானநிலையங்கள் இந்த திட்டத்தின் அடிப்படையில் சீரமைக்க முடிவு செய்யப்பட்டது.

இந்திய விமான நிலையங்களை சர்வதேச தரத்திற்கு இணையாக மேம்படுத்த அடுத்த ஐந்து ஆண்டுகளில் உள்நாட்டு விமான போக்குவரத்துத் துறைக்கு ரூபா 56 ஆயிரத்து 400 கோடி முதல் ரூபாய் 66 ஆயிரத்து 40 கோடி வரை முதலீடு தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருகின்றது.

இந்தத் தொகையை கூடுதல் வரியாக பயணிகளிடமே வசூலிக்க மத்தியரசு ஆலோசித்து வருகிறது. இந்த விமாகனநிலையங்களை பயன்படுத்தும் ஒவ்வொரு பயணியும் இதற்காக பயணக்கடடணத்துடன் கூடுதலாக ரூபாய் 500 வரியாக செலுத்தவேண்டும் இந்த வரி தனிக் கணக்கில் வசூலிக்கப் பட்டு அந்த விமான நிலையங் களின் மேம்பாட் டிற்காக மட்டுமே பயன்படுத்தப்படும் மத்திய அரசின் தனி உயர்மட்டக் குழு பொறுப்பில் இந்த நிதி பராமரிக்கப்படும்.

## ஆளுநர் நியமனம்

தமிழக ஆளுநராக இருந்த ராம்மோகன்ராவ் தனது பதவியை ராஜிநாமா செய்ததையடுத்து இந்திர ஆளுநராக இருந்த சுர்ஜீத்சிங் பர்னாலா தமிழக ஆளுனராக நேற்று முன்தினம் பதவியேற்றுள்ளார்.

கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் மேல்நீதிமன்ற தலைமைநீதிபதி சுபான்ரெட்டி இவருக்குப் பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். இந் நிகழ்ச்சியில் தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள்,சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அன்பழகன், சபாநாயகர் காளி முத்து தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன்,மத்திய அமைச்சர் டி.ஆர். பாலு தி.மு.க. துணைப் பொதுச் செயலர் மு.க.ஸ்டாலின் மற்றும் உயர் நீதி மன்ற நீதிபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க.வின் இருநாள் கூட்டம் ஆரம்பம்

(புதுடில்லி)

பாரதிய ஜனதாக்கட்சியின் தேசிய நிர்வாகக்குழுவின் இரண்டு நாள் கூட்டம்நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இந்துத்துவா பிரச்சினை பா.ஜ.க.விஸ்வஹிந்து பரிசத்திற்குமிடையே கடும் கருத்து வேற்றுமை இருப்பதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து இக் கூட்டம் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. முன்னாள் மத்தியமைச்சரும் பா.ஜ கட்சி எம்.பியுமாக சுமித்திரா மகாஜன் மக்களவையிலிருந்து இராஜினாமா செய்ய தீர்மானித்துள்ளார்.



தூத்துக்குடி பழைய பேருந்து நிலையம் அருகேயுள்ள அரச போக்குவரத்து கழக பணிமனை முன் மழைநீரில் சிக்கித் தவிக்கும் பேருந்துகள்.

# சனநாயக மரபுகளைக் காப்பதில் இலக்கியத்தின் பங்கு மகத்தானது

## பிரதமர் மன்மோகன்சிங்

(புதுடில்லி)

நாட்டின் ஒருமைப்பாட்டை வலிமையுறச் செய்வதிலும் சனநாயக மரபுகளைக் கட்டிக் காப்பதிலும் இலக்கியம் பெரும் பங்காற்றியுள்ளது என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

சாகித்ய அகடமியின் பொன் விழா நிகழ்ச்சிகள் டில்லி, விஞ்ஞான் பவனில் நடைபெற்ற போது பிரதமர் மன்மோகன்சிங் விழாவை துவக்கிவைத்து பேசியதாவது;

பொன் விழா கண்டுள்ள சாகித்ய அக்டமி நாட்டின் தனித் தன்மையைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகித்துள்ளது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதிலும், மொழி மற்றும் ஒவ்வொரு பகுதியின் தனித் தன்மையைப் பேணிக்காப்பதிலும் இதன் பங்களிப்பு முக்கியமானது. நமது இலக்கியங்களுக்கு தேசிய மேடை அமைத்துக்கொடுத்தது சாகித்ய அக்டமி.

நாட்டின் ஒருமைப்பாட்டை வலிமையுறச் செய்வதிலும், சனநாயக மரபுகளைக் கட்டிக் காப்பதிலும் இலங்கியம் பெரும் பங்காற்றியுள்ளது.இவ்வாறு பிரதமர் மன்மோகன்சிங் பேசினார். விழாவில் மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை அமைச்சர் ஜெய்ப்பால் ரெட்டி உள்ளிட்டோர்

# சேது சமுத்திரத் திட்டத்தினால் சுற்றுச்சுழல் பிரச்சினை இல்லை

## இந்திய மத்திய அரசு வலியுறுத்து

சேது சமுத்திரத்திட்டத்தை செயற்படுத்துவதில் சுற்றுச் சூழல் பிரச்சினை எதுவும் இல்லையென இந்திய சுற்றுச்சூழல், வனத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சேது சமுத்திரத் திட்டத்தின் சுற்றுச் சூழல்மற்றும் தொழில்நுட்ப அம்சங்கள் பற்றி தமது அமைச் சகத்தைச் சேர்ந்த நிபுணர்குழு முழுமையாக பரிசீலித்திருப்பதாக தெரிவித்துள்ளார். காவிரி /வைகை உள்ளிட்ட தமிழக ஆறுகளை தூய்மைப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு விரிவுபடுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.


# தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

சம்பளத்திட்டம்:-

$\frac{4430 - 5530}{10 \times 110}$ + 2000.00 = 6,430.00 + சிறப்புக்கொடுப்பனவு 3000.00 = 9430.00

மேற்படி சம்பளத்திட்டத்தில் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 07.11.2004 ஆம் நாள் ஞாயிறு காலை 09.00மணி தொடக்கம் மாலை 04.00 மணி வரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை,அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு :-

இப்பணிக்கு இணைய விரும்புவோர் இந்நாளில் வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முகாமையாளர்
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி 10300)

# கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்

## உப்பு விநியோகம் தொடர்பான அறிவித்தல்

### கரைச்சி, கண்டாவளை

பிரதேசங்களுக்காகிய உப்பு விநியோக முகவராக கிளி/மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம் 01.11.2004 இல் இருந்து செயற்படுவதால் உப்பினைப் பெற்றுக்கொள்ள விரும்பும்

- பல.நோ.கூட்டுறவுச் சங்கங்கள்
- தனியார் வர்த்தக நிறுவனங்கள்


கீழ்க்கான் விபரப்படியான முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
கிளி /மாவட்ட கூட்டுறவுச்சங்கங்களின் ஒன்றியம்,
டிப்போ முறிப்பு வீதி,
செல்வா நகர், கிளிநொச்சி.

(சி.10298)

### அவுஸ்-இந்திய இறுதி டெஸ்ட்போட்டி

# பரபரப்பானதும் எதிர்பார்க்க முடியாததுமான வெற்றியொன்றை இந்தியா பெற்றது —



பரபரப்பான டெஸ்ட் போட்டி ஒன்றில் பலரது எதிர்பார்க்கையையும் மீறி இந்திய அணி அவுஸ்.அணியை 3 ஓட்டங்களினால் தோற்கடித்தது.

இந்தியாவிற்கும்-அவுஸ்திரேலியாவிற்கும் இடையிலான நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த மூன்றாம் திகதி (கடந்த புதன்கிழமை) மும்பாயில் ஆரம்பமானது. மழை காரணமாக முதல் நாள் தடைப்பட்ட ஆட்டம் பிற்பகல் ஆரம்பமாகி மூன்றாவது நாளான நேற்றே முடிவிற்கு வந்தது.

நீண்ட காலமாக டெஸ்ட் விளையாடும் இருஅணிகள் மோதிய இப்போட்டி சுமார் இரண்டே கால் நாட்கள் ஆட்டத்துடன் முடிவிற்கு வந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இவ்டெஸ்ட் போட்டியில் இரண்டு நாட்களில் 38 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் தனது இரண்டாவது இனிங்சில் 05 ஓட்டங்களுடன் இருந்த இந்திய அணி இன்று ஆட்டத்தைத் தொடங்கியதும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான கம்பீரும், சேவாக்கும் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தனர். பின்னர் சோடி சேர்ந்த சச்சின் டெண்டுல்கரும், லக்ஷ்மனும் சிறப்பான இணைபாட்டம் ஒன்றை வழங்கினர். இந்நிலையில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்திருந்த டெண்டுல்கர் (55) ஆட்டம் இழந்ததைத் தொடர்ந்து லக்ஷ்மனுடன் சோடி சேர்ந்த ராவிட்டும் ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க முற்பட்டார்.

இந்நிலையில் லக்ஷ்மன் அறுபது ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்க, ராவிட்டுடன் இணைந்த கைப் சற்று ஓட்ட எண்ணிக்கையை அதிகரிக்க உதவிய போதும் நீண்ட நேரம் நிலைத்து நின்று ஆடமுடியவில்லை.

இந்நிலையில் 205 ஓட்டங்களுக்கு இந்தியா தனது அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. அவுஸ்திரேலியா தரப்பில் மைக்கல் கிளார்க் 9 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து 167 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் தேநீர் இடைவேளையின் பின்னர் களமிறங்கிய அவுஸ்திரேலியா முதலாவது ஓவரில் இரண்டாவது பந்தில் தனது முதலாவது விக்கெட்டைப் பறிகொடுத்தது. லாங்காரத் தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் விரைவாக ஓட்டத்தைக் குவிக்க முனைந்த வேளையில் முரளி கார்த்திக்கின் பந்துவீச்சில் ஆட்டம் இழந்தார். இதனைத் தொடர்ந்து



களமிறங்கிய மாட்டினும் முரளி கார்த்திக்கின் அதே ஓவரில் ஓட்டம் எதுவும் எடுக்காத நிலையில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

அவுஸ்திரேலிய வீரர்களில் மத்தியூஹெய்டனைத் தவிர எவருமே நிலைத்து நிற்க முடியவில்லை. இந்நிலையில் முரளி கார்த்திக்கினதும், ஹர்பஜன் சிங்கினதும் சுழல் பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாது அவுஸ் அணி 93 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 13 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவியது.

ஹர்பஜன்சிங், முரளிகார்த்திக் முறையே தலா ஐந்து, மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக இரண்டு இனிங்சிலுமாக ஏழு விக்கெட்டுக்களை கைப்பற்றிய முரளிகார்த்திக் தெரிவு செய்யப்பட்டார்.

இவ்டெஸ்ட் தொடரின் ஆட்டநாயகனாக மாட்டின் தெரிவு செய்யப்பட்டார்.

நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரில் ஏற்கனவே இரண்டு போட்டிகளில் வென்று அவுஸ்திரேலியா தொடரைக் கைப்பற்றியிருந்தது.

ஆயினும் இறுதி டெஸ்டில் இந்தியாவிற்குக் கிடைத்த வெற்றி ஓர் ஆறுதல் வெற்றியாக இருப்பினும் அவுஸ்-இந்திய டெஸ்ட் தொடர் கிரிக்கெட் ரசிகர்கள் எதிர்பார்க்கப்படும் முக்கிய தொடர்களில் ஒன்றாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஹெவிட் முன்னணியில்



மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடரில் அவுஸ்திரேலியாவின் ஹெவிட் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினர். பிரான்ஸ் தலைநகர் பரிசில் ஆண்களுச்கான மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் நடந்து வருகிறது ஆண்கள் ஒற்றையர் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் கடந்த புதன்கிழமை நடந்தது. இதில் இரண்டாம் நிலை வீரரான ஹெவிட், உலகின் முதல்நிலை சீனியர் வீரரான பிரான்ஸ் கேல் மொன்பல்சை எதிர்த்து விளையாடினார். பெல்ஜியத்தின் கிம் கிளிஜ்டர்ஸ் உடனான காதல் முறிவுக்குப் பிறகு முதல் முறையாக ஹெவிட் களமிறங்குவதால் ரசிகர்கள் இடையே இப்போட்டி அதிக எதிர் பார்ப்பை ஏற்படுத்தியது. இதில் ஹெவிட் 6-3, 7-6 என்ற நேர்செட் களில் எளிதில் வெற்றி பெற்றார்.




### -முல்லை மாவட்டத்தில்

## மாவீரர் கிண்ணத்திற்கான 'மாபெரும் உதைபந்தாட்டம்!

முல்லை மாவட்ட கழகங்களுக்கிடையேயான மாவீரர் வெற்றிக் கேடயத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு நடாத்தப்படவுள்ளது.

இதில் பங்குகொள்ளவிரும்பும் கழகங்கள் தங்கள் பதிவுகளை அந்தந்தப் பகுதி பிரதேச விளையாட்டுத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

போட்டிகள் அனைத்தும் காலதாமதப்படுத்தாமல் நடைபெறும் எனவும், போட்டி நடைபெறும் இடமும் திகதியும் அந்தப்பகுதி விளையாட்டுத்துறை அதிகாரிகளிடம் தெரியப்படுத்தப்படும் எனவும், முல்லை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கமல் தெரிவித்தார்.(20)

## முல்லை .பிரதேசத்தில் மென் பந்து கிரிக்கெட் போட்டி

தமிழீழத்தேசியத்தலைவரின் 50 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு முல்லைமாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் முல்லைப் பிரதேச வர்த்தக சங்கம் நடாத்தும் மட்டுப்படுத்தப்பட்ட 15 ஓவர் கொண்ட துடுப்பாட்டப்போட்டி (மென்பந்து) எதிர் வரும் 12ஆம் திகதி நடைபெற உள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்ள உள்ள கழகங்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுகளை முல்லைத்தீவிலுள்ள முல்லை மண் உதிரிகள் வாணிபத்திலோ அல்லது மடு அன்னை பல்பொருள் வாணிபத்திலோ உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லை மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கமல் கேட்டுக் கொள்கின்றார்.

## முல்லை.ம.வி கிரிக்கெட் அணிக்கு பாடசாலையில் கௌரவிப்பு

'கடந்த 31 ஆம் திகதி 16 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கிடையேயான மென்பந்துப் போட்டியில் முதலிடம் பெற்ற முல்லை மகாவித்தியாலய அணியினருக்கு அவர்களது பாடசாலையில் பாராட்டும் பரிசில்களும் வழங்கப்பட்டன.

அடுத்ததாக நவம்பர் முதலாம் திகதி பாடசாலையில் நடந்த இந் நிகழ்வில் 54 ஓட்டங்களைப் பெற்ற ஜெனராஜ், நான்கு விக்கெட்டுகளை வீழ்த்திய தவேந்திரன் ஆகியோருக்குப் பாராட்டி பரிசில்கள் வழங்கினர். பாடசாலை அதிபா ம.அன்ரனி ஜெயநாதன் போட்டியில் கலந்து கொண்ட அனைவரையும் கௌரவித்து வாழ்த்தினார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோர்களும் கலந்து கொண்டனர். (20)

### -வை.எம்.சி.ஏ.வருடாந்தப் போட்டிகள்

## பூப்பந்தாட்டம். கரம் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விபரம்

யாழ்ப்பாணம் வை.எம்.சி.ஏ யினரால் வருடாந்தம் நடாத்தப்பட்டு வரும் உள்ளக விளையாட்டுக்களான பூப்பந்தாட்டம், கரம் சுற்றுப்போட்டிகள் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் கடந்த வாரம் இடம் பெற்றது.

பூப்பந்தாட்டப் போட்டிகள் மட்டுப்படுத்தப்பட்ட வயதினருக்கிடையே ஆண்கள், பெண்களுக்கும் மற்றும் ஆண்கள், பெண்களுக்கான திறந்த போட்டிகளாகவும் இடம்பெற்றன.

10,12,14,16,18 வயதுப்பிரிவினருக்கும் திறந்த போட்டிகளிலும் வெற்றியீட்டியவர்கள் விபரம் வருமாறு, 10 வயதுப் பிரிவினருக்கான ஆண்கள் தனிப் போட்டியில் 15-03, 15-05 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தை எம்.ஆகாஷும் இரண்டாம் இடத்தை எஸ்.சஜீவனும் பெற்றுக்கொண்டனர்.

10 வயதுப் பெண்கள் தனிப்போட்டியில் செல்வி எம் ஜோய்காருண்யா 21-05, 21-00 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், செல்வி.க.நந்துசா 21-19 என்ற புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

12 வயது ஆண்கள் தனிப்போட்டியில் எஸ்.ஆர் கரிதரன் 21-03, 21-01 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் கே.சுபாஸ்கரன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

12 வயது பெண்கள் தனிப்போட்டியில் செல்வி. கே.ஜெனித்தா 15-11, 15-08 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் எஸ்.சரண்ஜா இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

14 வயது ஆண்கள் தனிப்போட்டியில் என்.கமலரூபன் 15-08,15-06 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் எம்.அமில்ரன் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

16 வயது ஆண்கள் தனிப்போட்டியில் என்.சனேந்திரா 15-08,14-03 என்ற புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தையும், எஸ்.வல்லவக்குமரன்15-10 என்ற புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

16 வயது ஆண்கள் இரட்டையர் போட்டியில் என்.சனேந்திரா, கே.சாமிலன் அணியினர் 15-12,17-16 என்ற புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தையும் எஸ்.வல்லவக்குமரன் என்.கமலரூபன் அணியினர் 15-13 என்ற புள்ளிகளைப்பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

16 வயதுப்பிரிவு பெண்கள் தனிப்போட்டியில் செல்வி.ஏ.கீர்த்திகா 11-06,13-10 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், செல்வி.ஜே.மடோனா இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

16 வயது பிரிவு பெண்கள் இரட்டையர் போட்டியில் செல்வி.ஜே.மடோனா, செல்வி.ஏ.கீர்த்திகா அணியினர் 15-12, 17-14 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், செல்வி.ஆர் நிஷாந்தராணி செல்வி தி.மதுராந்தி அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

18 வயது பிரிவு ஆண்கள் தனிப்போட்டியில் எஸ்.ரம்மியராகுலன் 15-08, 15-12 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் எஸ்.பிரசாந் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

18 வயது பிரிவு ஆண்கள் இரட்டையர் போட்டியில் என்.யுகேந்திரா ரி.ஞானகணேசன் அணியினர் 15-12, 17-15 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், எஸ்.பிரசாந் பி.சயிந்தன் அணியினர் 15-08 என்ற புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். 18 வயதுப்பிரிவு கலப்புப் போட்டியில் எஸ்.பிரசாந், செல்வி ஏ.கீர்த்திகா அணியினர் 15-12, 15-11 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், பி.சயிந்தன் செல்வி.மடோனா அணியினர் 15-14 என்ற புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

திறந்த போட்டியில் ஆண்கள் தனிப்பிரிவில் கே.நிக்சன் ராஜ் 15-12, 15-04 என்ற புள்ளிகளையும் பெற்று முதலாம் இடத்தையும், எஸ்.பிரசன்னா 15-12 என்ற புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் கே.நிக்சன் ராஜ் ஏ.பாஸ்கரன் அணியினர் 15-05,15-07 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் எஸ்.பிரசன்னா எஸ்.விமலகாந் அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.


பெண்களுக்கான தனிப்போட்டியில் திருமதி. என்.கரிதரன் 15-04, 15-05 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், செல்வி.கே.பிரதீபா இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

பெண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் திருமதி என்.ஹரிதரன். செல்வி.க.நந்தசா அணியினர் 15-12, 15-12 என்ற புள்ளிகளைப்பெற்று முதலாம் இடத்தையும் செல்வி ஜே.மடோனா செல்வி.ஏ. கீர்த்திகா அணியினர் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

கலப்பு இரட்டையர் ஆட்டத்தில் கே.நிக்சன் ராஜ் செல்வி.ரி.மதுராந்தி அணியினர் 15-13, 15-11 என்ற புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், திரு ஆர்.ஹரிதரன். திருமதி என்.ஹரிதரன் அணியினர் 15-12 என்ற புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

போட்டிகள் மூன்று சுற்றுக்கள் கொண்ட போட்டிகளாக நடாத்தப்பட்டன. (41)

**சிந்தனைக்கு**



மக்களின் ஆதரவுடன் மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புகளே,நிரந்தர மானதாக நிலைத்து நிற்கும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# தமிழரின் உடமைகள்!

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார். இவ்விஜயத்தின் போது இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, சனாதிபதி அப்துல்கலாம், காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியாகாந்தி, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உட்பட்ட தலைவர்களை அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

இச்சந்திப்பில் இந்தியா-சிறிலங்கா இடையிலான பலதரப்புப் பிரச்சினைகள் மற்றும் ஒத்துழைப்புக்கள் குறித்து இருநாட்டுத் தலைவர்களும் விரிவான பேச்சுவார்த்தை நடத்துவதோடு இருதரப்பினரும் பல உடன்பாட்டிற்கும் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் இரு தரப்பினர் இடையேயும் உடன்பாட்டிற்கு வர முடியாத விடயங்கள் எவையும் இருக்கும் என எதிர்பார்ப்பதற்கும் இல்லை.

ஏனெனில் இருதரப்பும் பெரும் விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்படத்தயர்ராகவுள்ளன. இதற்கு இருதரப்பிற்குமான தேவைகள்-அதாவது ஒன்றிற்கொன்றிற்கான தேவைகள் இவ்விட்டுக் கொடுப்புக்களுக்கு அடிப்படையாகவுள்ளன. சுருக்கமாகக் கூறுவதா னால் தமிழ் மக்களின் உரிமைகளுக்கெதிரான போராட்டத் தினைத் தோற்கடிப்பதற்கு இந்தியாவின் இராணுவ ரீதியிலான ஒத் துழைப்பு உள்ளிட்ட அனைத்து வகையிலான உதவியும் சிறிலங்கா விற்கு இந்தியாவிடம் இருந்து பெறப்பட வேண்டியவையாகியுள்ளன.

இதேவேளை இந்தியாவைப் பொறுத்து இலங்கையில், இந்தியாவின் பொருளாதார நலன்-பிராந்திய ரீதியிலான இராணுவ மேலாதிக்கம் உட்பட்ட அனைத்து நலன்களும் பாதுகாக்கப்படுதல் வேண்டும் ஆகையினால், சிறிலங்காவிற்கு இந்தியாவும்-இந்தியாவிற்குச் சிறிலங்காவும் போதிய ஒத்துழைப்பை வழங்கக் கூடிய மனோநிலையில் உள்ளன.

இவ் ஒத்துழைப்பில்/ விட்டுக்கொடுப்பில் அரசுகளின் இணையாகக் குறிப்பாக இலங்கையின் இறையாண்மை, வளங்கள் மற்றும் சூழல் பாதுகப்பு என்பன , தொடர்பான விடயங்கள் கூடக்கருத்திற் கொள்ளப்படுவதாக இருக்கப்போவதில்லை என்பதும் வெளிப்படையானது. எடுத்துக்காட்டாக இலங்கையைப் பாதிப்பிற்குள்ளாக்கும் என சிங்களப் புத்த ஜீவிகளினாலேயே எச்சரிக்கப்படும் சேது கால்வாய்த் திட்டம், இந்திய மீனவர்களின் எல்லை கடந்த சுரண்டல் போன்ற விடயங்களில் கூட விட்டுக்கொடுப்புக்கள் இடம்பெறும் என்பதற்கான வாய்ப்புக்களே உண்டு.

அதாவது சேது சமுத்திரத் திட்டம் இலங்கையின் கடற்பரப்பிலோ, அன்றித் தரைப்பரப்பிலோ எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்த மாட்டாது என இந்தியா வழங்கும் வாக்குறுதிகளுடன் சந்திரிகா குமாரதுங்க இவ்விடயத்தில் கைகழுவிவிடக்கூடும். இந்தியா இத்தகைய அறிவிப்பை ஏற்கனவே வெளியிட்டும் உள்ளது. இதேபோன்றே இலங்கை வடபகுதிக்கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பது தொடர்பாக ஏதோ ஒருவகையான இணக்கப்பாட்டிற்கு-அதாவது வடபகுதிக் கடற்பரப்பை இந்தியாவிற்குக் குத்தகைக்கு விடவோ அன்றி அத்துமீறி மீன்பிடிக்கும் இந்தியப் படகுகளைத் தடையின்றி அனுமதிப்பது தொடர்பாகவே இவர்கள் இணக்கப்பாட்டிற்கு வரக்கூடும்.

தற்பொழுது இங்கு நாம் கூற முற்படும் விடயமானது இந்தியாவிற்கும்-சிறிலங்கா அரசிற்கும் இடையிலான இத்தகைய உடன்பாடுகள்/ விட்டுக்கொடுப்புக்கள் தொடர்பாக எமது கண்டனத்தையோ ஆட்சேபத்தையோ தெரிவிப்பதற்காகவல்ல. ஏனெனில் எமது கண்டனமும் ஆட்சேபமும் புரிந்துகொள்ளப்படப் போவது மில்லை. ஏற்றுக்கொள்ளப்படப் போவதுமில்லை. அதுமட்டுமல்ல, இந்தியாவிற்கும்-சிறிலங்காவிற்கும் இடையிலான அனைத்து உறவுகளுக்கும்/ உடன்பாடுகளுக்கும் நாம் எதிரானவர்களும் அல்ல.

ஆனால் தற்பொழுது சிறிலங்காவும், இந்தியாவும் கையாள முற்படும் விடயங்களில் ஒருபுறத்தில் இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கத்தக்கவை என்பதும், அடுத்ததாக இருதரப்பும் பேசிவரும் பிரச்சினைகளில் பெரும்பாலானவை தமிழர் தரப்புடன், தமிழர் தாயகப் பிரதேசத்துடன் சம்பந்தப்பட்டவை என்பதுமாகும்.

அதாவது சிறிலங்கா அரசிற்கு இந்தியா வழங்கும் இராணுவ-பொருளாதார உதவிகள் நிச்சயமாகத் தற்பொழுது அமுலில் இருக்கும் யுத்தநிறுத்தத்தையும் சமாதானப் பேசசுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கும் குந்தகத்தை ஏற்படுத்தத்தக்கவை. ஏனெனில் சிறிலங்கா அரசு யுத்தநிறுத்ததை நிறுத்தியமையும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முற்பட்டமையும் இராணுவ ரீதியிலான பின்னடைவின் காரணமாகவே ஒழிய யுத்தத்தின் மீதான வெறுப்போ, சமாதானத்தின் மீதான ஆவலினாலோ அல்ல.

அடுத்ததாக சேது கால்வாய்த் திட்டம் வடபகுதிக் கடலில் இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக்கை ஆகியன தமிழர் தாயகத்துடனும் வளத்துடனும் சம்பந்தப்பட்ட விடயங்கள் ஆகும். இவை குறித்து தமிழர் தரப்பை ஓரம்தள்ளி-புறந்தள்ளித் தீர்மானம் எடுத்தல் என்பது பிரச்சினையின் தீர்வாக இருக்க மாட்டாது.

இவை ஒருபுறத்தில் தமிழ் மக்களின் உரிமைகளையும், உடமைகளையும் விற்று சிறிலங்கா ஆட்சியாளர்கள் இலாபம் அடைய முற்படுவதாகவும், மறுபுறத்தில் இந்தியாவையும்-தமிழ் மக்களையும் நேரடியாகவும் நிரந்தரமாகவும் பகைத்துக்கொள்ள வழிவகை தேடும் நடவடிக்கையாகவுமே இருக்க முடியும். இதேசமயம் இவற்றை எல்லாம் இந்தியாவும் கருத்திற்கொள்ளாது போனால் இலங்கைத்தமிழர் விடயத்தில் இந்தியா எந்தவிதமான அக்கறையும் கொண்டதாக இல்லை என்பதை வெளிப்படுத்துவதாகவே இருக்கும்.

# இந்திய வர்த்தக சமூகத்துடன் சனாதிபதி சந்திரிகா சந்திப்பு

(கொழும்பு)

இந்தியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமராதுங்க நேற்று நண்பகல் இந்திய வர்த்தக சமூகத் தினரைச்சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் .

இச் சந்திப்பானது புதுடில்லியில் உள்ள வாஸ்பலக் ஹோட்டலில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது பல்வேறு துறைகளைச் சோந்த 22 வர்த்தகர்கள் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ளனர். இலங்கையில் இந்திய முதலீட்டாளர்கள் அதிக முதலீடுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவது குறித்தும் இச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டதுடன் தகவல் தொழில்நுட்பம்,புகையிரத சேவை,விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் துறை உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டன. இச்சந்திப்பில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சா லக்ஷ்மன் கதிர்காமர் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# அரசின் சில துறைகள் தொடர்பாக ஜே.வி.பி க்கும் சிக்கல் தோன்றியுள்ளது

—அமைச்சர் அனுரகுமார திசாநாயக்க

தற்போதைய அரசாங்கத்தின் சில துறைகள் தொடர்பாக பொது மக்களுக்கு மாத்திரமின்றி மக்கள் விடுதலை முன்னணிக்கும் சிக்கல்கள் தோன்றியுள்ளதாக விவசாய, கால்நடை வளர்ப்பு, காணி மற்றும் நீர்ப்பாசனத் துறையமைச்சர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தற்போதைய விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக பாரிய செயற்றிட்டங்களை எடுத்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் அகில இலங்கை விவசாய சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் அரசாங்கத்தின் சில துறைகளில் சிறிய பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளமை உண்மையாகும். பெரும்பாலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதனால் குழப்பமடைந்துள்ளனர். சிறு சிறு பிரச்சினைகள் காணப்படுகின்ற போதும் விவசாயிகளுக்கு சுபீட்சத்தை ஏற்படுத்துவதற்காக நாம் விவசாயத் துறையை முன்னேற்றுவதற்காக சகல நடவடிக்கையினையும் மேற்கொண்டுள்ளோம் எமக்கிடையே எவ்வாறான பிரச்சினையும் இல்லாதிருக்குமானால் நாம் ஒரே கட்சியாக அல்லவா இருந்திருக்க வேண்டும். அதற்காகவே நாம் இரு தரப்புக்களாக செயற்படுகின்றோம். இருந்த போதிலும் நாம் சிறிய விடயங்களைப் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மென்ரக ஆயுதங்களின் பரம்பலை தடுக்க தேசிய ஆலோசனைக்குழு

—சனாதிபதி சந்திரிகா அமைத்தார்

ஐக்கிய நாடுகள் சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத் திற்கமைய இலங்கையில் சட்ட விரோத சிறிய மற்றும் மென்ரக ஆயுதங்களின் பரம்பல் குறித்து நடவடிக்கை எடுக்க தேசிய ஆணைக்குழு ஒன்றை சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்ட ஒழுங்கு அமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜா இந்த ஆணைக் குழுவின் தலைவராக பணி புரிவார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறிய மற்றும் மென்ரக ஆயுதங்களின் சட்ட விரோத வர்த்தகத்தைதடை செய்வதற்கு ஆகக் கூடுதலான ஒத்துழைப்பை பெறும நோக்கத்துடன் பொதுமக்களிடையே விழிப்புணர்வுத் திட்டமொன்றை அமுல் செய்வதற்கு வழிவகுக்கும் முக்கிய பொறுப்பும் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது அத்துடன் சட்ட விரோத சிறிய மற்றும் மென்ரக ஆயுதங்களை சேகரிப்பதற்கு திட்டமொன்றை வகுக்கும் பணியும் ஆணைக் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சட்ட விரோத சிறிய மற்றும் மென்ரக ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் பற்றித் தகவல் கொடுப்பவர்களுக்குச் சன்மானம் வழங்கும் திட்டமும் ஒழுங்கு செய்யப்படவுள்ளதாகவும் அதே வேளை சட்ட விரோத ஆயுதங்களை ஒப்படைப்பவர்களுக்கு மன்னிப்பு வழங்குவதற்கான திட்டமொன்றையும் சனாதிபதி ஆணைகுழு தயாரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சட்ட விரோதமாக ஆயுதங்கள் விநியோகிக்கப்படும் இடங்களை இனங்கண்டு இந்த ஆயுதக் கடத்தலை தடுப்பதற்கான யோசனைகளை வழங்கும் கடமைகளும் இந்த ஆணைக்குழுவிற்கு உண்டு.

இந்தத் திட்டத்தை நடைமுறைபடுத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பைப் பெறுவதற்கு ஆணைக்குழு முயற்சி செய்யவேண்டுமென்றும் நடவடிகை கை திட்ட அமுலாக்கல் தொடர் பாக மேற்கொளப்பட்ட பணிமனையின் முன்னேற்றம் என்பன பற்றியும் தமக்கு அவ்வப் போது அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்றும் சனாதிபதி சந்திரிகா ஆணைக்குழுவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# சிறுவனை தூக்கிச்செல்ல முயன்ற இராட்சதக் கழுகு குறித்த எச்சரிக்கை

பயாகலைக்கும் பேருவளைக்கும் இடையில் வான்பரப்பில் இராட்சதக்கழுகு ஒன்றுவட்டமிடுவதால் சிறுவர்களை மாலை நேரங்களில் கடற்கரைக்குச் செல்ல வேண்டாம் என பேருவளைப் பொலிசார் பொது மக்களிடம் கேட்டுள்ளனர். இந்தஇராட்சதக்கழுகு கடற்கரைகளில் விளையாடும் சிறுவர்களை கொத்தியும், நகங்களினால்கீறியும் காயப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த இராட்சதக்கழுகு கடந்த புதன்கிழமை ஐந்தரை வயது சிறுவனைச் சுமார் ஆறு அடி உயரத்திற் குத்தூக்கிச் சென்றுள்ளது.இதனை அவதானித்த சிறுவனின் தாய் குறித்த கழுகைக் கம்புகளினால் தாக்கித் தனது குழந்தையை மீட்டுள்ளார். இராட்சதக் குழுகுவின் நகக் கீறலுக்குள்ளான இந்தச் சிறுவன் சிகிச்சைக்காக நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இக் குழநதை கடற்கரையில் விளையாடிக கொண்டிருக்கும் பொழுது இந்த சிறுவனைத் தூக்கிச்செல்வதற்கு முற்பட்டுள்ளது. இக்கழுகின் ஒரு சிறகு சுமாா எட்டு அடி நீளமுள்ள தென தெரிவிக்கின்றனர்.

# அடுத்த ஆண்டு டிசம்பருக்குப் பின் சந்திரிகாவை சனாதிபதியாக ஏற்க மாட்டோம்

—ஐ.தே.க அறிவிப்பு

அடுத்த வருடம் டிசம்பர் மாதம் 22 ஆம் திகதிக்குப் பின் சனாதிபதி சந்திரிகாவை சனாதிபதியாக ஏற்றுக்கொள்ள மாட்டோம். அவரை ஐக்கிய தேசியக் கட்சி இந்த நாட்டின் சனாதிபதியாக ஏற்றுக்கொள்ள மாட்டாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச்செயலாளர் நாயகம் திஸ்ச அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி இரவு 12 மணிக்குப் பின் சனாதிபதியினால் பிறப்பிக்கப்படும் எந்தக் கட்டளைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனபொது மக்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

-சிறில. கடற்படையினரால் கைதான-

# இந்திய மீனவரை விடுவிக்க வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பதற்காக கொழும்பு மேன் முறையீட்டு நிதிமன்றத்திடம் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

கடந்த மாதம் தமிழ் நாட்டு மீனவர்கள் 10பேர் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டதுடன் இவர்கள் வெடிபொருட்களுடன் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும் குற்றஞ் சாட்டப்பட்டு, தடுத்து வைக்கப் பட்டதால் இப் பிரச்சினையை விசாரணை செய்வதற்கு யாழ். மாவட்ட நீதிமன்றத்திற்கு சட்ட சிக்கல்கள் இருப்பதால் கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் மூலம் இவர்கள் விசாரணை செய்து விடுதலைசெய்ய முடியும் என காணாமற் போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினர்களுக்கான அமைப்பு பரிந்துரை செய்துள்ளது. இதற்காகவும் இம் மீனவர்களின் விபரங்களையும் இவர்களின் குடும்பத்தினருக்கு அறிவிக்கவும் இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர்களான பவானி இராஜேந்திரனுக்கு ஒரு கடிதத்தினை அனுப்பி வைக்கும்படி இம்மீனவர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையும் ஏற்று காணாமற் போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பு இத் தொடர்பை ஏற்படுத்தியிருக்கிறது. (33)

# சிறு நீரகம் சம்பந்தமான விசேட மருத்துவ சிகிச்சை

நோர்வே நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் சிறுநீரகம் சம்பந்தமான மருத்துவ சிகிச்சை நிபுணர் அவர்களால் சிறுநீரகம் சம்பந்தமான நோய்களிற்குரிய ஆலோசனைகளும், சிகிச்சைகளும் நாளையும், நாளை மறுதினமும் கிளிநொச்சி வைத்திய கலாநிதி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் வழங்கப்படவுள்ளது.

இச்சிகிச்சை காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும். பயன் பெற விரும்புவோர் கிளி.பொன்னம்பலம் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளனர்

# வவுனியா மாவட்டத்திற்கான விவசாயக்குழுக் கூட்டம்

வவுனியா மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற உள்ளது.

வவுனியா மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் கணேஷ் தலைமையில் நடைபெற உள்ள இக் கூட்டத்தில் வன்னிமாவட்ட புனரமைப்பு அபிவிருத்தி அமைச்சர் றிஷாட் பதியுதீன், வன்னி மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், அ.அடைக்கலநாதன், ச.கனகரட்ணம், ந.சிவசக்தி ஆனந்தன், சு.வினோநோகராதலிங்கம் உட்படப் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் நயாப்திட்ட முன்னேற்றம் விவசாயக் காப்புறுதி, கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும், கமக்காரர் அமைப்புக்கள், நெல்கொள்வனவு, விதைநெல் உற்பத்தி, மர நடுகைத் திட்டம் உட்பட பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப் பட உள்ளது. (10)

# என்னை அரசு சிறையிலடைத்தால் அங்கு சந்திரிகாவின் சரித்திரத்தை எழுதுவேன்

-முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க-

சமுர்த்தி நிதி மோசடி தொடர்பாக தன்னைச்சிறையில் அடைத்தால் வெளியேவரும் போது சந்திரிகா குமாரதுங்காவின் சரித்திரத்தை எழுதிக்கொண்டுதான் வருவேன் என முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திசநாயக்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் சமுர்த்தி பாதுகாப்பு நிதிமோசடி சம்பந்தமாக அரசாங்கம் என்னை எந்தநேரத்திலும் கைது செய்யலாம் அப்படிக்கைது செய்தால் தற்பொழுது அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பல அமைச்சர்களும் .இதில் கைது செய்யப்படலாம், சிறை செல்வதற்கு நான் தயங்கப் போவதில்லை. சிறையில் இருக்கும் பொழுது சந்திரிகாவின் சரித்திரத்தை எழுதுவற்கு தீர்மானித்துள்ளேன். நான் சிறையில் இருந்து வெளியேவரும் பொழுது அவரின் சரித்திரப் புத்தகத்துடன் வெளியே வருவேன் என அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

# உள்முரண்பாடு கொண்ட கட்சிகளின் பட்டியலில் ஹெல உறுமய சேர்கிறது

இலங்கையில் அண்மையில் தேர்தலொன்று இடம்பெறுமாயின் அதில் ஜாதிக ஹெல உறுமய கட்சி போட்டியிட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அந்த கட்சியின் செயலாளர் பதவிக்காக இருவருடைய பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஜாதிக ஹெல உறுமயவில் உட்கட்சி முரண்பாடுகள் தெரிய வந்துள்ளன.

இதனையடுத்து, இந்தக் கட்சியை முரண்பாடுகளுடைய கட்சியாக பிரகடனப்படுத்துவதற்கு, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தீர்மானித்துள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன..

ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் பதவிக்கு. சிஹல உறுமயவின் உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவின் பெயரும், கொடபொல அமரகீர்த்தி தேரரின் பெயரும் முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது. இதனையடுத்தே இந்தக் கட்சி, உட்கட்சி முரண்பாடுகளைக் கொண்ட கட்சிகளுடன் சேர்க்கப் படவுள்ளதாக தேர்தல் செயலக வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. இதேவேளை, ஜாதிக ஹெல உறுமயவின் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கான உயர் மட்டக் குழுவின் கூட்டமொன்று, இடம் பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## மார்புச் சிகிச்சை

17.11.2004 ஆம் திகதி மாவட்ட வைத்தியசாலை முல்லைத்தீவில் மார்பகச் சிகிச்சை நடைபெறும் எனவும் இனிவரும் காலத்தில் ஒவ்வொரு மாதங்களிலும் 3ஆவது புதன்கிழமைகளில் இவ் வைத்தியசாலையில் இச் சிகிச்சை நடைபெறும் எனவும் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (20)

# யாழ்.இல் ஈருருளியைத் திருடியவர் கலாசாரம் பேணும் குழுவிடம் பிடிபட்டார்

மருந்துக்கடையில் மருந்து வாங்க வந்தவரின் ஈருருளியை திருடிச் சென்ற இளைஞர் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களினால் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

நாவலர் வீதி சந்தியில் உள்ள மருந்துக்கடையில் விட்ட ஈருருளியை திருடிக்கொண்டு செல்வதைக் கண்ட கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் திருடனைப் பிடித்து ஈருருளியையும் மீட்டதுடன் ஈருருளியை உரியவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இத்திருட்டில் ஈடுபட்டவர் சுமார் 18 வயது மதிக்கத்தக்க இளைஞராவார். குறிப்பிட்ட இளைஞர் கலாசாரத்தைப் பேணும் இளைஞரினால் எச்சரிக்கப்பட்டு விடப்பட்டுள்ளார். (41)

## சந்தேக...

இந்த உத்தரவு நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டுள்ளது. குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் இவரால் கடத்தப்பட்ட வாகன சாரதியொருவர் படுகொலை செய்யப்பட்டு அந்தப் பகுதியில் புதைக்கப்பட்டிருந்தார் என்றும், மேலும் பல புதைகுழிகள் அங்கு இருக்கலாம் என விசாரணைகளின் போது சந்தேகம் எழுந்துள்ளதாகவும் தெரிவித்திருந்தனர். இதனை ஏற்றுக் கொண்ட மன்னார் மாவட்ட நீதிபதி எம்.எல்.அப்துல்லா இதற்கான அனுமதியை வழங்கினார்.

## காத்தான்...

களையும் எதிர் நோக்க வேண்டி வரும். எனவும் அதில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இப் பிரச்சினைக்கு தீர்வு காணும வரை வர்த்தகர்கள் தங்கள் வியாபார நிலையங்களை மூடி இப் போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டுமென வேண்டுகோளும் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கருத்து வெளியிட்ட சுபி முஸ்லிம்களான அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவையினர் இந்தப் பிரசுரம் ஜாமித்துல் உலாமா சபை, இஸ்லாமிய வழிகாட்டல் நில்லயம் ஆகியவற்றின் பின்னணியில் வெளியிடப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ளனர். நேற்று வியாபார தலங்களைத் திறந்து வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. புனித ரம்ழான் பெருநாளை முன்னிட்டு இந்த வேண்டுகோளை காத்தான்குடி ஜம்மியத்துல் உலாமா விடுத்துள்ளது. கடந்த 5 நாட்களாக பிரதேசத்தில் நிலவி வரும் முறுகல் காரணமாக வியாபார தலங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன

இதேவேளை ஜம்மியத்துல் உலாமாவுக்கும் சுபியாதட்துவ அமைப்புக்கும் இடையில் இணக்கம் ஒன்றை ஏற்படுத்த நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட முயற்சி பலனளிக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காத்தான்குடியில் இடம்பெறும் வன்முறைகளின் பின்னணியில் வெளிநாடு ஒன்றின் ஒத்துழைப்பு இருப்பதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. ரவுப் மௌலவி என்ற முஸ்லிம் பிரிவைச் சேர்ந்த முக்கியஸ்தர் ஒருவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளதாக ஆங்கில நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. வெளிநாட்டு நிதி உதவியுடன் செயற்படும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளே இந்தத் தாக்குதல்களை நடத்திவருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரச படைகள் இரு தரப்புக்குமிடையில் சமரசத்தை ஏற்படுத்த தவறி வருவதாகவும் அரசாங்கம் தமது பிரச்சினை குறித்து கவனம் செலுத்தவில்லை என்றும் ரவுப் மௌலவி பிரிவினர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதேவேளை காத்தான்குடியில் ஆரம்பித்த வன்முறை ஏனைய பகுதிகளுக்கும் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.(32)

## காணாமற்...

நியமிக்கவில்லை இதனை அடுத்து நீதிபதி வரதராஜா இவ் வழக்கு விசாரணைகளை அடுத்த மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். இவ்வாறு 8 தடவைகள் ராஜபக்ஷ யாழ்.மேல் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டும், அவருக்குப் போதியளவு காலஅவகாசங்கள் வழங்கப்பட்ட போதிலும் அவர் தன் தரப்பிற்கு எந்தச் சட்டத்தரணியையும் நியமிக்காமல் இருப்பது தன் மீதுள்ள வழக்கு விசாரணைகளை இழுத்தடிப்புச் செய்வதற்கே ஆகும் என்பதைச் சுட்டிக் காட்டியே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33,27)

## தெகிவளை...

தெஹிவளையில் மிகச் சாதரணமானவராக நடமாடிய தயாளகுமார் இராணுவப் புலனாய்வு பிரிவுடன்.மிக நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்ததாகவும் தெரியவந்துள்ளது. இவருடைய தந்தையான வேலாயுதம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியின் அலுவலகத்தில் நீண்டகாலமாகக் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நீர்கொழும்புப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்ட குமாரவேலு பத்மகுமார் என்பவரும் புலனாய்வு துறைக்கு தகவல் வழங்கி வந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## சட்ட...

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள தேர்தல் செயலகத்தின் அதிகாரியொருவர், அரசியலமைப்புச் சட்டத்தின் 30ஆம் 31ஆம் சரத்துக்களுக்கமைய, தேர்தல் நடைபெறும் தினம், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர் பதிவு செய்யப்பட வேண்டிய தினம் என்பன, தேர்தல் ஆணையாளரால் தீர்மானிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளது.

இந்த விடயம் அரசியலமைப்புச் சட்டத்தின் 30ஆம் சரத்தின் 5ஆம் பிரிவில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நீதிபதியின் ஆலோசனையைப் பெற்றுக்கொண்ட பின்னர் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தேர்தல் நடைபெறும் திகதி மற்றும் வருடம் தொடர்பாக அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## பெண்கள்...

திருமதி சரோஜா சிவச்சந்திரன் மற்றும் இத் திட்ட மாவட்ட செயற்குழு உறுப்பினர் யசோதரன் இத் திட்டத்தை வழி நடத்தும் குழு உறுப்பினர் பொ.நரசிங்கம் அன்னை இல்ல நிர்வாகி வணபிதா றெஜினோல்ட் ஆகியோர் பெண்களுக்கெதிராக வன்முறைகளை ஒழிப்போம் என்ற கருத்துரைகளை வழங்கினார்கள்.

அடுத்து இத் திட்டத்தின் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர் தவப்புதல்வியின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது. இந் நிகழ்ச்சித்திட்டத்தின் பெண்கள் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் நிறுவனம் சார் ஊழியர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (கு.ச)

# சாவு அறிவித்தல்

## அமரர் கணபதிப்பிள்ளை தங்கராசா

(துனுக்காய்ப் பகுதி ப. நோ. சங்க காவலாளி)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், விநாயகர்புரத்தை வசிப்பிடமாகவும், (இல: 48, முதலாம் கண்டம் முத்தையன் கட்டு) தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தங்கராசா (துணுக்காய்ப் பகுதி ப.நோ.கூ.சங்க காவலாளி) 04.11.2004 அன்று காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை இராசம்மா தம்பதிகளின் அன்புமகனும், பசுபதி நாகரத்தினத்தின் மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக்கணவரும். சதீஸ்வரன், அமுதநிலா, தனிசா, கர்சனா ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற விசாலாட்சி கற்பகம் (விநாயகபுரம்) ஆகியோரின் பெறாமகனும, நாகலிங்கம் (விசுவமடு) அவரது மருமகனும் ஆவார். அன்னாரின ஈமக்கிரிகைகள் 06-11-2004 அன்று மாலை 4.00 மணிக்கு அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முத்தையன்கட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினா், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்:-
க.தர்மபூபதி,
உடன்பிறவா சகோதரி,
விநாயகபுரம்.

(4141)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.